33. MADAVARAM HIGH ROAD,
Perambur, Madras-11.

தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, மாசி 7 (18-2-'61) சனிக்கிழமை | இதழ் 35

பாவ மன்னிப்பு

கண்ணதாசன்

'தோமான்' என்னும் ஒரு தேசத்தை, 'ருதுவான்' என்னும் தேசத்துக்காரர்கள் ஆண்டுவந்தார்கள்.

தோமானும் ருதுவானும் ஒரே நிலப்பரப்பாக இருந்ததால், இது சாத்தியமாக இருந்தது.

தோமானியர்களை ஆளுவதற்குத் தங்களுக்குள்ள உரிமையை, இந்த நிலத்தொடர்ச்சியின் மூலமே ருதுவானியர்கள் நிறுவிக்கொண்டார்கள்.

நாளாக நாளாக, தோமானியர்கள் தாங்கள் அடிமைகள் என்பதை உணர ஆரம்பித்தார்கள்.

அந்த உணர்ச்சியை முதலாகக் கொண்டு, தோமானியர்களுக்குச் சில தலைவர்கள் தோன்றினார்கள்.

அப்போது அவர்கள் சிறுபான்மையினராக இருந்ததால், அவர்களுக்குள் நெருங்கிய பாசம் இருந்தது.

ஒருவரையொருவர் கண்டால், கண்ணீர்விட்டுக் கட்டியணைக்கிற அளவுக்கு அவர்கள் உறவு வளர்ந்தது.

அவர்கள் உண்மையையே பேசினார்கள்.

அதனால், தங்குதடையின்றி வார்த்தைகள் வெளிவந்தன.

தோமான் தேசத்து ஒவ்வொரு அடிமையும் அவர்களை நம்ப ஆரம்பித்தான்.

கடுகளவு இருந்தவர்கள், கடலளவு விரிந்தார்கள்.

தோமானியத் தலைவர்களே, தங்கள் விடுதலைக்கு வழிகாட்டிகள் என அவர்கள் நம்பினார்கள்.

ஒவ்வொருவனும், தான் ஒரு தோமானியன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட ஆரம்பித்தான்.

தலைவர்களின் பாதங்களில் காணிக்கைகள் குவிந்தன.

"நமது தேசம் சுதந்திர தேவதையின் குடியிருப்பாக மாறும்" என்று அந்தத் தலைவர்கள் நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தனர்.

ஆனால்—

அடிமைகள் அடிமைகளாக இருக்கும்போதே, தலைவர்கள் தாங்கள் விடுதலை பெற்றுவிட்டதாக உணர ஆரம்பித்தார்கள்.

போர்க்கருவி செய்வதற்காகச் சமைக்கப்பட்ட மண்டபம்-போக மண்டபமாயிற்று.

ஆத்திரம் கொண்டிருந்த மக்களின் நடுவே கூத்தர்கள் குடியேறினர்.

ஆரவாரமும் போர்முரசும் கேட்டுக்கொண்டிருந்த மாளிகையில்—

ராகமும் தாளமும் கேட்கத் தொடங்கிற்று.

எதிரியை மிதிக்க ஒருவன் காலைத் தூக்கினான்-

அந்தக்காலில் ஒருவன் சதங்கையைக் கட்டிவிட்டான்.

வீரக்கால் நாட்டியமாடத் தொடங்கிற்று.

"எங்கே பகைவன்? எங்கே பகைவன்?" என்றொருவன் எதிரியைத் தேடினான்.

அதையே பல்லவியாக வைத்து ஒருவன் பாட்டுப் போட்டு, அவனையும் நாடக மேடைக்கு இழுத்துச் சென்றான்.

ருதுவானியரின் முகத்திரையைக் கிழிக்கவேண்டுமென்று ஒருவன் முழங்கினான்.

அதற்குவழி, நாடகமேடையின் திரையைத் தூக்குவது தான் என்றொருவன் அழைத்துச் சென்றான்.

"நாம் அடிமைகள்.

நமக்கு விடுதலை எப்போது?" என்று சிலர் முழங்கினார்கள்.

"ஆடுகளே ஆடுகளே அவசரப்படாதீர்கள்; மேய்ப்பனை நம்புங்கள்" என்று கூத்தர்கள் பதில் தந்தார்கள்.

ஆடுகள் மேய்ப்பனைப் பார்த்து,

"மேய்ப்பனே மேய்ப்பனே எங்களை எந்தத் திசையில் அழைத்துச் செல்லப்போகிறாய்?" என்று கேட்டன.

மேய்ப்பனுக்கு மயக்கம் வந்தது.

மேய்ப்பனின் அருகில் இருந்த ஏய்ப்பன் பதில் சொன்னான்.

"எவ்வளவுக் கெவ்வளவு தங்கச் சுரங்கங்களைக் கைப்பற்றுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு விடுதலை சுலபம்"

கூத்தர்கள் குதித்தெழுந்தார்கள்.

ஏய்ப்பனின் ராஜ தந்திரத்தை அவர்கள் வெகுவாகப் புகழ்ந்தார்கள்.

ஆடுகள் தங்கச் சுரங்கத்தைத் தேடிப் புறப்பட்டன.

அடிமைகளின் கோட்டையில் கூத்தும் கும்மாளமும் பெருகத் தொடங்கிற்று.

அடிமைகளுக்கு வழிகாட்டி வந்த தோமானியத் தலைவர்களுக்குக் கூத்தர்கள் வழிகாட்டத் தொடங்கினர்.

தலைவர்களின் போர் முழக்கத்தை விட, கூத்தர்களைப் பார்த்துக் கொண்டிருப்பதே தங்களுக்குப் பெருமையென்று அடிமைகள் கருத ஆரம்பித்தார்கள்.

கிழக்கில் வெள்ளி முளைத்திருந்தது.

விடுதலைச் சிவப்போடு இளம் பரிதி கிளம்புவான் என்று எதிர்பார்க்கப் பட்டது.

"விடுதலை வரப்போகிறது; வரப்போகிறது"; என்றொரு தலைவன் கத்தினான்.

"உஷ்-சத்தம் போடாதே-சுவையான நாட்டியம் நடந்துகொண்டிருக்கிறது"- என்றொருவன் அவனை அடக்கினான்.

"இதுதான் நேரம்- இதுதான் நேரம்-போர்புரிவோம்"-

என்றொருவன் முழங்கினான்.

"எதுநேரம் என்று எனக்குத் தெரியும் — நாட்டியத்தைக் கவனி" என்றொருவர் அவனை அடக்கினார்.

"தோமான் தேசத்துக் குடிமக்களே!

சுகபோகத்தில் ஆழ்ந்துவிட்ட பரிதாபத்துக்குரியவர்களே!

ஆனந்த வெறிதானா அடிமைகளுக்கு மீட்சி?

தன்னைக் கொன்று கொண்டு தாயை வாழவைப்ப தல்லவா விடுதலை?

இதயத்தைப் புனிதப் படுத்துங்கள்.

வேரோடு களையெடுங்கள்.

தருணம்—இது தருணம்."

என ஒருவன் முழங்கினான்.

ஆத்திரக் கூத்தனொருவன் அவனை அழித்து விடுவதுபோல் பார்த்தான்.

(5-ம் பக்கம் பார்க்க)

கல்லூரிக் கவியரங்கம்

கண்ணதாசன் அவர்களின் அன்னை விசாலாட்சி ஆட்சியின் நினைவாக காரைக்குடி அழகப்பா தமிழ்மன்றம் நடத்திய அனைத்துக் கல்லூரிப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கவிதை.

அவலம்

மீ. இராசேந்திரன் பி. ஏ.

தியாகராசர் கல்லூரி, மதுரை.

விண்மீன்கள் வீழட்டும்; பொதிகைக் காற்று
வீசாமற் போகட்டும்; பொன்னி ஆற்றுத்
தண்ணீரின் மெல்லலைகள் கொதிப்பை ஊட்டும்
தணல்வடிவாய் மாறட்டும்; கவலை கொள்ளோம்!
கண்ணீரில் மலர்ந்திருக்கும் பூக்கள் நாங்கள்
கடலைப்போல் கொந்தளிக்கும் எங்கள் நெஞ்சம்!
பண்மிழற்றும் யாழ்மண்ணில் வீழ்ந்த தேபோல்
பாழ்பட்ட பின்னும்ஏன் 'மூச்சு ஊஞ்சல்'?

பொங்குமொளிச் செங்கதிரோன் தங்கக் கையால்
புத்தழகுத் தாமரையைத் தழுவிக் கொஞ்சும்;
திங்கள்தன் குளிர்முகத்தை இரவில் நீட்டித்
தேன்கமழும் அல்லிப்பெண் இதழைக் கொஞ்சும்;
கங்குலினைக் கிழித்தெழுந்த மின்னல் ஆட்டம்
காட்டுமிளங் கொடியணைத்துத் தென்றல் கொஞ்சும்
மங்குகின்ற எங்களின வாழ்வில் என்றும்
மறக்காமல் அவலம்தான் மகிழ்ந்து கொஞ்சும்!

சாலைகளில், மரத்தடியில் எங்கள் வாழ்க்கை!
தணற்பரிதி மழைவெள்ளம் இடி முழக்கம்
நாளெல்லாம் விருந்தினராய் வந்தே போக
நரைகுருடு நொண்டிஊமை இவர்க ளோடு
காலமெல்லாம் இழவுப்பண் எழுப்பு கின்றோம்!
கருகிவிட்ட சருகாகும் இதழ்கள்; கண்கள்
கோலஒளிக் கதிர்வற்றிச் சாகும்; கன்னம்
குழிவிழுந்து செழிப்பிழந்து வறண்டு காயும்!

கடலுக்குள் முத்தெடுக்க மூச்சை விட்டோம்;
கடும்பாறைப் பரப்புடைத்தே வளப்பம் கண்டோம்;
சுடும்வெப்பம் படவியர்வை கொட்டிக் கண்ணைச்
சுட்டெரிக்கும் கட்டிடங்கள் தோற்றுவித்தோம்;
படர்ந்திருக்கும் முட்காட்டை மாய்த்தே செந்நெற்
பயிர்வளரும் வயலெடுத்தோம்; எனினும் எங்கள்
உடலுக்குள் உயிரில்லை; உழைத்துத் தேய்ந்த
ஓடானோம்; செல்லாத காசாய் உள்ளோம்!

பெற்றெடுத்த தாய்தந்தை நோயின் வாயில்
பிடிபட்டுத் துடிக்கின்றார்; மரம்தளர்ந்த
அற்றம்பார்த் ததைத்தாங்கும் விழுதுப் பிள்ளை;
அத்திறமோ எமக்கில்லை! நச்சுப் பாம்புப்
புற்றருகே படுத்துள்ளோம், சீறிப் பாயும்
புலிக்குகையில் திரிகின்றோம்; புட்கள் கூட
நெற்றொலிக்கும் மரப்பொந்தில் கூடி வாழும்,
நிலையாக எங்களுக்கோ வீடொன் றில்லை!

கட்டுதற்குத் துணியில்லை; பிறந்த மேனிக்
கலைக்காட்சி பொருளாகக் கருகும் எங்கள்
மொட்டுகளைப் பாருங்கள்; முகையில் வீழும்
முறைசரியோ கூறுங்கள்! கருணை இல்லார்
வெட்டுகின்ற பலியாடா? இல்லை தீயில்
விழுந்த பழந் தமிழ் ஏடா நாங்கள்? மேகம்
கொட்டும் நீர் மான்பருகிக் காட்டில் துள்ளும்
குடிசையிலோ கொடும் வறட்சி; கானல் ஆட்சி!

கொல்லைகளில் விளைந்திருக்கும் குப்பைக் கீரை
கொய்தெடுத்துக் கலயத்தில் போட்ட வித்துப்
பிள்ளைகளைக் கூப்பிட்டுக் கூறு போடும்
பிணக் காட்சி பாருங்கள்; கார் காலத்தின்
முல்லை மலர் நகை மகளிர் கவின் இழந்தார்;
முகில் தேய்ந்த மதியானார்; காதல் எங்கோ
சொல்லடங்கித் துயில் கொள்ளும்; வறுமைக்கூத்துத்
துயர்ச்சிந்து செவிகுத்தும்; ஆந்தை கத்தும்!

வாடையிலே நடுக்குற்றுத் தவித்த மஞ்ஞை
வாட்டத்தைத் தீர்க்கத்தான் போர்த்திருந்த
ஆடையினை அணிவித்தான் பேகன் என்றே
அழகொழுகப் பேசுகின்றார்; இங்கே காண்மின்
வாடையிலே மெய்விதிர்க்க, பற்கள் எல்லாம்
வல்லோசைப் பறைகொட்ட, பனியின் ஆக்க
ஓடையிலே மிதக்கின்ற பாசி போல
உடல் கிடக்கும்; கோடைவெயில் உளம் குடிக்கும்!

தைத்திங்கள் புதுப்பொங்கல்! மனைகள் தோறும்
தமிழ் நாட்டில் உயர் செல்வப் பெண்கள் ஆக்கும்
நெய்ப் பொங்கல் சுவைத்துண்டு இன்பங் கண்டு
நெஞ்சினிக்கப் பூரிப்பார் உண்டு; எங்கள்
கை தொட்டு வாய்பட்ட துண்டோ பொங்கல்?
கண்மட்டும் வெண்முத்தைச் சிந்தும்; பொங்கும்!
தெய்வங்கள் திருநாட்கள் எங்கட் கில்லை;
தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்?

காட்டுக்குள் மலர்பூக்கும்; முகர் வாரில்லை
கடலுக்குள் முத்திருக்கும்; குளிப்பா ரில்லை
பாட்டுக்குப் புதையலெனப் போற்றத் தக்க
பாவலரும் நாவலரும் எழுச்சி யூட்டி
நாட்டுக்குத் தொண்டாற்ற மூளைத் திருந்தும்
நல்குரவால் நலிகின்றோம்; உறையுள் தூங்கும்
தீட்டாத வாளைப்போல் உள்ளோம்; எங்கள்
திறனறிந்து வாய்ப்பளிப்பார் யாரும் இல்லை!

இரந்துண்ண எடுத்தோமா யாக்கை? எச்சில்
இலைநத்தி நடத்துவதோ நாயின் வாழ்க்கை?
கரவாமல் கரைந்துண்ணும் காக்கை வையம்
கற்றுணர ஒற்றுமையை ஓதும்; வானம்
இரைக்கின்ற பெருமழையைத் தேக்கிப் பின்னர்
ஈகைசெய் குளத்தைப்போல், பழத்தை நல்கும்
மரத்தைப்போல் யார்இங்கே உள்ளார்? நச்சு
மரம்போன்றார் இருப்பதனால் என்ன நன்மை?

விண்முட்டும் கோயில்கள் கட்டி, நந்தா
விளக்கேற்றி மலர்தூவி இறைவன் முன்னால்
பண்பாடிப் பழம்வைத்துப் பூசை செய்து
பரவுகின்ற செல்வர்கள், காளான் ஆளும்
மண்மேட்டில் குடியிருக்கும் பசித்தெய் வங்கள்
மனமுருகிப் புலம்புவதை நோக்கா வண்ணம்
கண்கெட்டுப் போயினரோ? இல்லை அன்புக்
கருணையினைச் சிறை வைத்து மகிழ்கின்றாரோ?

படைத்தவனின் பிழைச் செயலோ? பாகுபாட்டைப்
படைத்தவரின் சதிச் செயலோ? யாரும் வேண்டா
நடைபாதை இலக்கியங்கள் நாங்கள்; வஞ்ச
நெருப்பின்வாய்ப் புகைந்த சுவரோவியங்கள்!
புடைத்தெடுத்த அருசியொரு பக்கம்; கொல்லைப்
புறப்பக்கம் உமி என்ற போக்கைக் காட்டும்
அடையாளச் சின்னமென உலவ லாமா?
அந்தோ! இத் தொல்லைக்கோ எல்லை இல்லை!

ஆதிமுதல் இன்றளவும் நின் றொலிக்கும்
அவலத்தின் பசிச் சிரிப்பு என்ற டங்கும்!
சாதிதரும் வேற்றுமைகள் உள்ளம் கொல்லும்;
சாத்திரப்பேய் ஆத்திரத்தால் பள்ளம் தள்ளும்!
காதினிக்க எல்லோரும் மன்னர் என்றே
கவிதை மழை பொழிவதனால் இன்னல் போமா?
போதிமர நீழற்கண் ஞானங் கண்ட
புத்தன் சொல் முத்துச்சொல்; பிறப்பே துன்பம்!

இரவில்லை பகலில்லை; எங்கள் வாழ்வில்
எப்போதும் இருட்டுத்தான்! விளக்கை ஏற்றும்
கரம் இல்லை உரம் இல்லை; அருவிப் பாய்ச்சல்
கண்ஊற்றும் வெந்நீர்தான்! படர்தற்கேற்ற
மரம் இல்லை கொம்பில்லை; சூறைக் காற்று
மன அடுப்பின் புகைச்சல்தான்! சாவுப் பாதை
வரங்கேட்டு நிற்கின்றோம்; பகுத்தே உண்ணு
வஞ்சகரை வரவேற்க முன்னர்ச் செல்வோம்!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்!

மலர் 7 | 18-2-'61 | இதழ் 35

ஐயோ - பாவம்! அவரென்ன செய்வார்?

அகில உலகையே கட்டியாள வேண்டுமென்னும் அடங்காத ஆவலினால், யுத்தவெறியும் ரத்தவெறியுங் கொண்டலைந்த சர்வாதிகாரப் பிரியர்கள் சிலர்-தங்களின் தனித்திறமையாலும், புஜபலபராக்ரமத்தாலும்—ஒரு குற்றமும் அறியாத உலக மக்களின் உரிமைகளை அழிக்கும் கொடுமைகளைச் செய்திருக்கின்றனர் பல சமயங்களில்.

கிரேக்க மாவீரன் மகாஅலெக்சாண்டர், மண்ணாசையின் காரணமாகக் களத்திலேயே காலங்கழித்த பனிரெண்டு ஆண்டுகளும்-ஐரோப்பா, ஆசியா ஆகிய இருபெருங் கண்டங்களுமே கதிகலங்கியது; கண்ணீர் விட்டது.

கி. மு. 338ல் தீப்ஸ் நகரைத் தீக்கிரையாக்கிச் சாம்பலாக்கி அவன்கண்ட முதற் களத்திலிருந்து கி மு. 323ல் அவன் பாபிலோனில் மரணமடையும்வரை, அவனால் வெல்லப்பட்ட நாடுகளும்-கொல்லப்பட்ட சைனியங்களும்-அழிக்கப்பட்ட நகரங்களும், அடிமைகளாக்கப்பட்ட மன்னர்களும் அவனின் உள்ளம் எவ்வளவு கொடுமை வாய்ந்தது என்பதைக் காட்டுகின்றன.

ஆனால்-அலெக்சாண்டரின் போர்வெறியை இகழுகின்ற வாயும், எழுதுகின்ற கையும் அவனுக்கே உரித்தான தனி ஆற்றலையும்-வீரத்தையும்-செயலாற்றும் பராக்ரமத்தையும் பாராட்டத் தவறுவதே இல்லை.

உலகின் இருகண்டங்களை வென்ற முதல் உலக மாவீரன் அவன்தான். அசிரிய மன்னன் ஒருவன் பொனீஷியாவின் ஒரு பகுதியான 'டயர்' என்னும் நகரை இருபது ஆண்டுகள் தொடர்ந்து முற்றுகையிட்டும் கைப்பற்ற முடியவில்லை.

அந்த நகரையே வென்று வீழ்த்திய 'வில்லாதி வில்லன்' அவன். உலகம் இகழத்தக்க செயல்களை அவன் செய்திருந்தாலும்-அவனிடமிருந்த புகழத் தக்க தனித்திறமைகளை உலகம் புகழ்ந்து கொண்டேதான் இருக்கும்.

'கெஸ்டபோ' என்னும் கெடுபிடிப்பட்டாளத்தின் துணையால், ஜெர்மானியில் யூதர்களே இருக்கக் கூடாது என்னும் வெறிகொண்டு, அறுபது இலட்சம் யூதர்களைக் கொன்று குவித்தவன் அடால்ப்ட் ஹிட்லர். அந்தக் கொடுமையாளன் எதிரிகள் கையில் தனது பிணம் கூடச்சிக்கக் கூடாது என்ற மான உணர்ச்சியால், தன்னையே சாம்பலாக்கிக் கொண்டான்,

இத்தகைய-தான் எவனுக்கும் அடங்காது, தனக்கே உலகம் அடங்க வேண்டுமென்னும் தனித்தன்மை வாய்ந்த அந்தப் புகழ்மிக்க சர்வாதிகாரிகளின் கீழ், தங்கள் உரிமைகளை இழந்து தவித்த ஒரு நாட்டு மக்களை விட—

தனக்கு எந்தவிதமான ஒரு தனித்தன்மையும் மானமும் இல்லாது—அடுத்தவர்களை அடக்கும் தெம்பும் திராணியுமில்லாது—தானே அடுத்தவனுக்கு அடங்கியிருந்து கொண்டு-தன் நாட்டையும், மக்களையும் காட்டிக்கொடுப்பதின் மூலமே நாடாளும் தலைவனுன, ஒருதலைவனின் கீழ் வாழும் மக்களைப் போல்-உலகிலேயே இழிந்தவர்களும் பரிதாபத்துக்குரியவர்களுமான மக்கள் வேறு எவரும் இரார்.

ஆற்றலும், மானமும் வாய்ந்த அந்தச் சர்வாதிகாரிகளால் உலகுக்கு ஏற்பட்ட பயங்கரத்தைவிட-கையாலாகாத் தனமும், கல்லாமையும் அறியாமையும் நிறைந்த ஒரு தலைவனால் நாட்டுக்கு விளையும் ஆபத்தும் கொடுமையும் அதிகமாகும்.

இதை அனுபவத்தில் கண்ட இன்றையத் தமிழர்களில் பலர்-அலெக்சாண்டரைப் போல்-கெய்ஸரைப்போல்-ஹிட்லரைப் போல் ஒரு ஆற்றல்மிக்க சர்வாதிகாரியால் தங்கள் நாடு ஆளப்படுமேயானால் நாம் எவ்வளவோ நன்மைகளைப் பெற்றிருக்கலாமே என்றுகூட ஏங்குகின்றனர்.

என்ன செய்ய? வினையை விதைத்துவிட்டுத் தினையை எதிர்பார்த்தால் எப்படிக் கிடைக்கும்?

கல்தோன்றி-மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய 'ராஜ்ஜியமான' "சென்னைராஜ்யத்தின்" முதல்வரான கனம் காமராசர் அவர்கள்—

"பண்டைய எந்தத் 'தமிழிலக்கியத்திலும் 'தமிழ்நாடு' என்ற பெயரே கிடையாது. பாரதியார் காலத்திற்குப் பிறகே 'தமிழ்நாடு' என்ற சொல் வழக்கிற்கு வந்தது" என்று "தமிழ்நாடு தமிழ்நாடு" என் ஓலமிடும் தமிழர்களின் அறியாமை (!) யைப் போக்க வேண்டுமென்னும் நோக்கத்தில் ஆற்றிய தெளிவுரையைக் கேட்டுத் தமிழர்கள் பலர் கொதிப்படைகின்றனர்.

இந்த விஷயத்தில், கோபப்படுபவர்களும், கொதிப்படைகின்றவர்களுமான தமிழர்கள்தான் கண்டிக்கத்தக்கவர்களும் தண்டிக்கத்தக்கவர்களும் ஆவார்களே தவிர-கனம் காமராசர் அவர்களல்ல.

தென்றல்

ஏப்ரல் 15-ந் தேதி இதழ்

ரா. பி. சேதுப்பிள்ளையின்

வெள்ளிவிழா மலராக வெளிவரும்

விலை 25 காசுகள்.

விபரங்கள் பின்னர்.

ஏனெனில்-தங்களை வழி நடத்திச் செல்லும் ஆற்றலும் திறமையும் அருகதையும் காமராசர் ஒருவருக்கே உண்டென்று தெரிந்துதான், அவரை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் அறிவிற்சிறந்த (!) தமிழ்மக்கள்.

பாவம் காமராசர்? அவரென்ன செய்வார்? வேண்டுமென்றே - தமிழர்களை ஏய்க்க வேண்டுமென்றே - தான் இலக்கியத்திலிருந்து தெரிந்துகொண்டதை மறைக்க வேண்டுமென்றே 'தமிழ்நாடு' என்பது இலக்கியத்தில் இல்லையென்று அவர் ஒருக்காலும் சொல்லவில்லை!

"நீரளவே ஆகுமாம் நீராம்பல்; தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு"

என்பதை-ஒளிக்காது மறைக்காது அவர் நிருபித்துக் காட்டுகிறார் அவ்வளவுதான்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் என்றொரு புலவன் இருந்தான். அவன் இராமாயணம் என்னும் காவியத்தைப் படைத்தான். அதிலே கிட்கிந்தா காண்டமென்றொரு காண்டமிருக்கிறது. அதில் நாடுவிட்ட படலத்தில்—

"தென் தமிழ்நாட்டு அகப்பொதியில்" என்று தமிழ்நாடு அழகோடு சிறப்போடு சொல்லப்படுகிறது. இராமாயணம் என்பது வேறொன்றுமில்லை; அதுவும் தமிழிலுள்ள இலக்கியம்தான். என்பதையெல்லாம் காமராசர் படித்தவரா? அல்லது படித்தவர்கள் பக்கம் நின்று கேட்டவரா? அல்லது கேட்டவர்களோடு பழகியவரா? இதில் ஏதாவது ஒன்று அமைந்திருந்தால் இலக்கியத்தில் 'தமிழ்நாடு' இல்லையென்று அவர் மனமாரச் சொல்லியிருப்பாரா?

பாவம் காமராசர்! அவரையா குறை சொல்வது?

இற்றைக்குச் சுமார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டதும் தமிழர்களின் சிறப்பையும் பெருமைகளையும் சொல்வதும், "முத்தமிழ் விரவிய நாடக நூல்" 'உரையிடப்பட்ட பாட்டுடை நூல்' என்றும் பாராட்டப்படுகிற சிலப்பதிகாரத்தில்—

"வடவாரியர் படை கடந்து
தென் தமிழ்நாடு ஒருங்குகாண"
"தென் தமிழ்நாட்டு தீதுதீர் மதுரை"
"வடதிசை மருங்கின் மன்னர்க்கெல்லாம்
தென் தமிழ்நாட்டுச் செழுவில் கயல்புலி"
"தென் தமிழ்நாடு ஆளும் வேந்தர்"

இப்படி-ஒரு இடத்திலில்லாது பல இடங்களில் "தமிழ்நாடு" சீருறச் சிறப்புற இருப்பது ஏன் அவருக்குத் தெரியவில்லை? என்று கேட்பது-குருடனை ஏன் ராஜ பார்வை பார்க்கவில்லையென்று கேட்கும் கொடுமையைப் போன்றதல்லவா?

தமிழர்கள் செய்த 'தீவினைப்பயனால்' தமிழர்களுக்கே முதலமைச்சராக வந்து வாய்த்த கனங் காமராசர் அவர்கள், தமிழர்களின் 'பூர்வஜன்ம' வினையால் இலக்கியத்தையே அறியாதவராக ஆகிவிட்டாலும், இப்'பாரத புண்ணியபூமி' யில் பிறந்த பாவத்திற்காக புராணத்தையாவது புரட்டியிருக்கலாம்.

"சந்தப் பொதியில் தமிழ்நாடு"
"வல்லாண்மையின் வண் தமிழ்நாடு"

என்ற சேக்கிழாரின் பெரிய புராணத்தில் வரும் தமிழ் நாடாவது அவர் கண்ணில் பட்டிருக்கும்.

பாவம் காமராசர்! அவருக்கு அந்தப் பாக்கியமும் கிடைக்கவில்லை.

திறமைகளினால் தலைவர்களானவர்கள் தவறு செய்தால்—அவர்கள் செய்தது தவறு என்று சுட்டிக் காட்டித் திருத்த வழியுண்டு. ஆனால் தமிழர்கள் செய்த தவறுகளினால் தலைவரானவர் செய்யும் தவறைத் திருத்த வழியேது?

தவறு செய்வோர் தண்டனை அடைய வேண்டும்.

தமிழன் அதைச் செய்தான். இன்று அனுபவிக்கிறான்.

இந்த அனுபவமாவது, இனி 'தமிழ்நாடு' என்பது இலக்கியத்திலேயே கிடையாது என்று சொல்கின்ற காமராசர் போன்றாரை முதலமைச்சராக்கும் கொடுமையைச் செய்யாதிருக்கப் பயன் படட்டும்.

வெண்பாப் போட்டி 14.

★

ஈற்றடி

பச்சைத் தமிழரின் பண்பு.

இறுதி நாள் 25-2-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6

தலைமைக் குடிமகன்

பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர்

மக்கள் வாழ்க்கைக்கு எத்துணையோ பல பொருள்கள் வேண்டியிருப்பினும், அவையெல்லாவற்றுள்ளும் இன்றியமையாதது உணவு ஒன்றே. அதனால், உணவை விளைவிக்கும் உழவன் எல்லாருள்ளும் உயர்ந்தவனாகின்றான். இது பற்றியே, திருவள்ளுவர் தம் ஒப்புயர்வற்ற உலகப் பொது நூலில், குடி செயல் வகையின் பின் உழவதிகாரத்தை வைத்தார்.

உணவளிப்பவன்

"உழுவார் உலகத்திற் காணியர்,
தாற்று(து)
எழுவாரை யெல்லாம்
பொறுத்து."

என்னுங் குறளால், உழவர் உலகமாகிய தேருக்கு அச்சாணியாவர் என்றுரைத்தார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார். 'அச்சாணியில்லாத தேர் முச்சாணும் ஓடாது, செயற்கை விளைவின்றி, மக்களினம் பெருத்த உலகம் ஒரு நாளும் நடைபெறாது. உணவு விளைத்தலை அதன் அருமை பற்றி அளித்தல் என்றது உயர்வு நவிற்சி.

விருந்தோம்பி வேளாண்மை செய்பவன்

விருந்து புதுமை. புதிதாய் வந்த அயலார்க்கு அன்புடன் உணவளிப்பதே விருந்தோம்பல். வேளாண்மையாவது பிறரை விரும்பிச் செய்யும் பல்வகையுதவி. இவையிரண்டும், தாமாகவே உணவை விளைப்பவரும் தலைமுறை தலைமுறையாய்ப் பிறரைப் பேணிப் பண்பட்டு வருபவருமான உழவர் குடியினர்க்கே இயலும். வேளாண்மை செய்வதிற்சிறந்ததினாலேயே, உழவர்க்கு வேளாளர் எனப்பெயர். உழுதுண்பாரும் உழுவித்துண்பாருமாக வேளாளர் இருவகையர்.

"வேளாளன் என்பான் விருந்திருக்க வுண்ணாதான்" என்றார் நல்லாதனார்.

இரப்போர் சுற்றத்தான்

"இரவார் இரப்பார்க்கொன்
றீவர் கரவாது
கைசெய்தூண் மாலையவர்."

என்றார் திருவள்ளுவ நாயனார்.

"இரப்போர் சுற்றமும்......
உழவிடை விளைப்போர்

என்றார் இளங்கோ வடிகள்

(சிலப். நாடுகாண். 149)

ஒத்தோர்க்கும் உயர்ந்தோர்க்கும் உயரிய முறையில் விருந்தளிப்பவர், இரப்போர்க்கு உணவும் பிறவும் அளிப்பது வியப்பன்று.

புரப்போர் கொற்றத்தான்

அரசன் உட்பட அனைவர்க்கும் உணவு விளைவித்தும், ஆள்வினைக்கு வேண்டும் ஆறிலொரு கடமையிறுத்தும், பகையரசன் படையெடுத்துவரின் பொருது வென்றும், ஊக்கமுள்ள தம் வேந்தன் பிறநாடுகளை வென்று புதுவிறல் தாயம் பெற உதவியும், அரசன் வெற்றிபெறக் காரணமாயிருப்பவர்வேளாண்பெருமக்களே.

இதனால்,

"பலகுடை நீழலுந்தங் குடைக்
கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்."

என்று திருவள்ளுவரும்,

வெளிற்றுப்பனந் துணியின்
வீற்று வீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத
கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப்
பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தருஉங்
கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின்
ஈன்றதன் பயனே,"

என்று வெள்ளைக்குடி நாகனாரும்,

'புரப்போர் கொற்றமும்...உழவிடை விளைப்போர்"

என்று இளங்கோவடிகளும், உழவரை உயர்த்துக் கூறினர்.

உழைப்பாளி

கடுங்கோடையிலும் புயல்மாரியிலும் இரவும் பகலும் உடலை வருத்தி உழைப்பவர் உழவரே.

முதற்றொழிலாளி

உலகில் முதன் முதல் தோன்றியது உழவுத்தொழிலே. அதனால், பிற தொழிலாளரும் ஒவ்வொரு வகை உழவராகவே கூறப்படுவர்.

விற்படைஞரை வில்லேருழவர் என்றும், நூற் புலவரைச் சொல்லேருழவரென்றும், கூறினார் திருவள்ளுவர். களவுத் தொழிலைக் 'களவேர் வாழ்க்கை என்றார் சீத்தலைச் சாத்தனார். வாள்மறவனை வாளுழவன் என்றது திவாகரம்.

பழுதற்ற தொழிலான்

உழவுத் தொழிலில் ஒருவகை குற்றமுமில்லை.

"ஆற்றங் கரையின்
மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும்
விழுமன்றே-ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்
கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர்
பணிக்கு,"

என்றார் அருந்தமிழ் மூதாட்டியார் ஔவையார்.

"வித்தும் இடல்வேண்டுங்
கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்."

என்று குறிப்பாக வேளாளனைப் பாராட்டிக் கூறினர் திருவள்ளுவர்.

"வேதநூல் முதலாகி
விளங்குகின்ற தலையனைத்தும்
ஓதுவா ரெல்லாரும்
உழுவார்தந் தலைக்கடைக்கே"

என்று கம்பர் கூறியதுங் காண்க.

(ஏரெழுபது).

பண்டைநாளில், சிற்றூர் வாணராயினும், பேரூர் வாணராயினும், கொல்லன், தச்சன், கற்றச்சன், கன்றான், தட்டான், கொத்தன், குயவன், வண்ணான், மஞ்சிகன் (நாவிதன்), வாணியன், பாணன், பறையன் முதலிய பதினெண் தொழிலாளரும் குடிமக்கள் எனப்பட்டு, உழவர்க்குப் பக்கத்துணையாயிருந்து தத்தம் தொழிலைச் செய்து, கதிரடிக்களத்தில் அவ்வக் காலத்துக் கூலத்தைக் கூலியாகப் பெற்று வாழ்ந்தமை, அக்காலத்துக் கூட்டரவு (சமுதாய) அமைப்பில் உழவரே தலைமையாயிருந்ததை உணர்த்தும்.

"சுழன்றும் ஏர்ப்பின்ன
துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

என்னும் குறட்கருத்தும் இதனாலேயே விளங்கும்.



"உழுவாருலகத்திற் காணி" என்னுங் குறளில் "அஃதாற்றுது" என்னுந் தொடரும், "சுழன்றுமேர்ப் பின்ன துலகம்" என்னுங் குறளில் "உழந்தும்" என்னும் சொல்லும், உழவுத் தொழிலின் உழைப்புக் கடுமையைக் குறிக்கும் குறிப்புக்களாம். பயிர்செய்தலைப் 'பாடுபடுதல்' என்னும் நெல்லையுழவர் வழக்கும் இங்குக் கருதத்தக்கது.

தன்னுரிமையாளன்

தன் நிலத்தில் உழுதுபயிர் செய்பவன் தனக்குத் தானே தலைவனாதலின், பிற தொழிலாளர் போல் பிறர்முன் கைகட்டி நிற்க வேண்டியதும் ஒருவர்க்கு அஞ்ச வேண்டியதும் இல்லை.

உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு
பின்செல் பவர்"

என்று தமிழ்மறை கூறுதல் காண்க.

உண்மை இங்ஙனமிருப்பவும், "உழவுத்தொழிலில் பூச்சி புழுக்களும் செடி கொடிகளும் கொல்லப்படுவதால், அதை இழிந்ததென்று உயர்ந்தோர் கை விட்டனர்." என்று ஆரியப் போலி அறநூல்கள் கூறும். இதினின்று தமிழ்க் கொள்கைக்கும் ஆரியக் கொள்கைக்குமுரிய ஏற்றத் தாழ்வைக் கண்டு கொள்க.

தலைமைக் குடிவாசி

மேற்கூறிய இயல்புகளால், உழவனே தலைமைக் குடிவாசி என்பது பெறப்படும். இதை உட்கொண்டே

"தென்புலத்தார் தெய்வம்
விருந்தொக்கல் தானென்றாங்(கு)
ஐம்புலத்தா றோம்பல் தலை."

"இல்வாழ்வான் என்பான்
இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை."

"இருந்தோம்பி இல்வாழ்வ
தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற்
பொருட்டு."

இங்ஙனம் பல்வகையிலும் உழவர் உயர்வுடையவராயிருந்தும், பிறப்போடு தொடர்புற்ற ஆரியக் குலப்பிரிவினையால், தாழ்ந்தவரென்று பிற்காலத்தில் தாழ்த்தப்பட்டனர். இதற்குத் தமிழரே காரணர். தன்னையும் தன்னினத்தையும் தகாதவகையில் தாழ்த்திக்கொண்டவன் தமிழனைத் தவிர வேறொரு நாட்டானும் இவ்விரிந்த வுலகத்தில்லை.

பாண்டி வேளாளர், நெல்லை வேளாளர், சோழிய வேளாளர், கொங்க வேளாளர், தொண்டை மண்டலந்துளுவ வேளாளர், குடியானவர், உடையார், படையாட்சியர், பள்ளர் எனப் பலகுலத்தினர் இற்றைத் தமிழ உழவர். இவருள் தலைமையான நெல்லைச் சைவ வேளாளரிடத்தும் பிராமணர் உண்பதில்லை. தமிழருள் தலைமையானவரே தாழ்த்தப்பட்டு விட்டதனால் அந்தணரரசர்வணிகர் வேளாளரான தமிழரெல்லாரும் சூத்திரர் எனத் தாழ்த்தப்பட்டு விட்டனர். தாழ்த்தப்பட்டவரென்று பொதுவாகக் கூறப்படுவார் ஒடுக்கப்பட்டவரும் பிறதமிழராலும் தீண்டப்படாதவருமாவர். இவ்விருநிலைமையும் மாறினாலொழியத் தமிழன் முன்னேறமுடியாது. ஆரியர் வருமுன் இங்கிருந்த கூட்டரவுநிலை பொருளாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டது. அவர் வந்தபின் ஏற்பட்டது மதவியலை அடிப்படையாகக் கொண்டது.

மேலும், உழவர் பெரும்பாலும் கல்லாதவராயிருப்பதால், நாட்டுப்புறத்தானென்றும், பட்டிக் காட்டானென்றும், படியாத முட்டாளென்றும், தற்குறியென்றும், இற்றையுழவனை இழித்துக் கூறுவதே வழக்கமாயிருக்கின்றது.

பொங்கல் என்பது, உழவர் பண்டிகை, அறுவடையான பின், புதிரி

என்னும் புது நெல்லைச் சமைத்து நன்றியறிவுடன் வழிபடு தெய்வத்திற்குப்படைத்துண்பதே பொங்கல். நீர்வளம் மிகுந்த பாங்கரில் முப்பூ விளையும். (பூவென்பது வெள்ளாமை.) நீர் வளமில்லா இடங்களில் மாரி நீர்த் தேக்கத்தால் ஒரு வெள்ளாமை தான் விளைக்க முடியும். ஆகவே, மார்கழி அல்லது தை மாத அறுவடையே நாடெங்கும் நிகழும். ஆதலால், தைப் பொங்கல் பெரும் பொங்கல் எனப் பெறும்.

செந்நெற் பச்சரிசியைப் பெரும் பாலுந் தவிடு போக்காமல் சரி நீர் வைத்துச் சமைத்து, பருப்புக்குழம்புடன் உண்பது பொங்கல் மரபு. "பருப்புக்கேட்கும் பச்சரிசிச்சோறு, செருப்புக் கேட்கும் சித்திரை மாத வெயில்!" என்பது பழமொழி, பொங்கற் பானையில் உலை பொங்கி வந்தவுடன் சிறிது வழிய விடுவது பொங்கல் அடையாளமாகக் கருதப் பெறும், இதுவே உழுதுண்பார் பொங்கல்.

அக்காரடலை (சருக்கரைப் பொங்கல்), அக்காரவடிசில் (சருக்கரை நெய்ப்பொங்கல்), நெய்ப்பொங்கல், மிளகுப் பொங்கல், வெண் பொங்கல் முதலிய சுவைமிக்க பொங்கல் வகைகளெல்லாம் உழுவித் துண்பாரும் செல்வருமான பிறர் பொங்கல். பால்பொங்க வைப்பது இடையர் பொங்கல். சல்லிக் கட்டென்றும் மஞ்சு விரட்டென்றும் மாடு விடுதல் என்றும் நடைபெற்று வருவது பண்டை முல்லை நில வழக்கம். (ஏறுதழுவல்).

திணை நிலைக் காலத்தில் உழவர் வழிபட்ட தெய்வம் விண்ணோர் தலைவனுன வேந்தன் (இந்திரன்). திணைமயக்கம் ஏற்பட்டபின், பாலை நிலத் தெய்வமான காளியும், நடுகல் தெய்வங்களும் வழிபடுதெய்வங்களாயின. சிவநெறியும் திருமால் நெறியுமான பெருமதங்கள் தோன்றியபின், உழுவித்துண்பார் தம் கொள்கைப்படி சிவனையோ திருமாலையோ வழிபட்டு வருகின்றனர்.

ஆங்கிலக் கல்வியினுலும் நயன்மை (நீதி)க்கட்சி யாட்சியினுலும், தமிழரிடையே மறுமலர்ச்சியுண்டாயிருப்பதால், பொங்கல் பெருநாள் ஒரு நாட்டினத் திருநாளாகத் தமிழரனைவராலும் ஒரு வகைப் புத்துணர்ச்சியுடன் இன்று கொண்டாடப்பட்டு வருகின்றது. பிராமணர் பொங்கலைச் சங்கராந்தி என்பர்.

பொங்கல் உழவர்க்கே சிறப்பாகவுரிய பெரும் பண்டிகையாயினும், அரசியலாரும் உழவரல்லாத பிற பொது மக்களும் இப்பெருநாளைக் கொண்டாடி உழவரை ஊக்குவதுடன்; நன்றியறிவாகவும் தந்நலங் கருதியும், நிலமுள்ள ஏழையுழவர்க்குக் கடனடைக்கவும், குலவெருதுகள் வாங்கவும் பொருளுதவியும், பொறியியற் கருவிகள், நல்விதைகள், வல்லுரங்கள் முதலியன இலவசமாக வழங்கியும்; நிலமில்லாதவுழவர்க்கு அவற்ருேடு நிலமும் வழங்கியும்; பெருநிலக் கிழவரும் சிறுநிலக்கிழவரும் 'நிலமில்லாவுழவருமாகிய முத்திறத்தார்க்கும் புதிய அறிவியல் முறைகளைக் கற்பித்தும்; உழைப்பினுல் பெருவிளைவு காட்டுபவர் பண்ணையாராயின் (மிராசுதார்) பட்டம் சின்னம் சலுகை முதலியவற்ருலும் எளியவராயின் நன்கொடையினுலும், சிறப்பித்தும்; சூத்திரன் என்னும் சிற்றிழிவையும் தீண்டாதான் என்னும் பேரிழிவையும் அடியோடகற்றியும்; எதிர்கால வுழவராவது தாய்மொழிச் செய்தித்தாளைப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக் கொள்ளுமாறு, இலவசக்கட்டாயத் துவக்கக் கல்வியை விரைந்தேற்படுத்தியும்; உணவுப் பொருள் விளைவுப் பெருக்க இயக்கத்தை ஓங்கச் செய்வாராக.

"பகடு நடந்த கூழ்" என்று நாலடியார் கூறியபடி, உழவுத் தொழிற்குதவும் எருதுகளையும், பிந்தியுதவக் கூடியகன்றுகளையும், பாலுணவளிக்கும் பெற்றங்களையும் (பசுக்களையும்), போதிய ஊட்டங் கொடுத்தும், மிகைவேலை வாங்காதும், நோய் மருத்துவஞ்செய்தும், உடையவர் பேணுமாறு கருத்தாய்க் கவனித்தும்; பேணுதவரைத் தண்டித்தும்; கால்நடைப் பண்ணைகளை ஆங்காங்கு ஏற்படுத்தியும்; அரசிலார் உழவுத் தொழிலை ஊக்குவாராக.

உழவர் வாழ்க! உழவெருதுகள் வாழ்க!

1-3-61 முதல் வெளிவருகிறது.

சந்துமுனையிலே சிந்துபாடும் மந்த மதியினர் களுக்கு அறிவு புகட்ட!

காசுக்குக் கற்பைவிற்கும் காரிகைகளுக்கு, கற்பின் வலிமையை தெளிவு படுத்த!

துன்பத்தின் பிடியிலே துவண்டு கிடக்கும் ஏழைப் பாட்டாளி களின் துயர் துடைக்க!

"இன்பம்"

ஆசிரியர்: எழுத்துவேந்தன்

திங்கள் இருமுறை, விலை. 16 காசு.

இதுவும் பாண்டியன்பதிப்பக வெளியீடுதான். பிரதி ஒன்றுக்கு 50 காசு வீதம் முன்பணம் கட்டி இன்றே ஏஜண்டாகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

'இன்பம்'
கோதண்டராமன் கோயில் தெரு,
சென்னை-33.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"போரும் கலையும் நமது இரண்டு கண்கள்"

என்ருெரு கூத்தன் விளக்கினுன்.

"இரண்டு கண்களும் பாதையைப் பார்த்தால்தானே ஊர் போய்ச்சேர முடியும்?

வலது கண் இடது கண்ணையும், இடது கண் வலது கண்ணையுமே பார்த்துக் கொண்டிருந்தால் வழி நடப்பது எப்படி"—என்ருெருவன் கேட்டான்.

வார்த்தை வளர்ந்தது; ஆத்திரம் பெருகிற்று.

இன்ப நாடக சூத்திரதாரிகள் பொங்கி எழுந்தனர்.

தங்கள் எஜமானர்களோடு போர் செய்ய வேண்டிய நேரத்தில்—

அடிமைகள் தங்களுக்குள்ளாகவே போர் செய்யத் துவங்கினுர்கள்.

ருதுவானியர்கள் இந்தப் போரைக் கேள்விப்பட்டு விழாக் கொண்டாடினுர்கள்.

"அவர்களை நாம் கவனிக்க வேண்டியதில்லை.

அவர்கள் தங்களுக்குள்ளாகவே கவனித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்."

என்று கேலி செய்யத் தொடங்கினுர்கள்.

தோமானிய விடுதலை வீரர்கள், இரு பிரிவாய் ஆகிவிட்டதை எண்ணித் தோமான் தேசத்துப் பொதுமக்கள் அனைவருமே கண்ணீர் வடித்தார்கள்.

"இதற்கொரு வழியில்லையா"-என்று ஏக்கத்தோடு கேட்டார்கள்.

சமாதான தேவதைகள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தார்கள்.

அவர்கள் நினைத்தது ஒருநாள் நடந்தது.

ஒருநாள்; ஒரேநாள்.

மறுநாள்—

"இந்தச் சமாதானத்தில் எங்களுக்கு உடன்பாடில்லை" யென்று ஒரு கூத்தரின் குரல் கிளம்பிற்று.

கூத்தாட்டரங்கின் விளக்குகள் ஒளி வீசத் தொடங்கின!

பக்கவாத்தியங்கள் தாங்களாகவே இசையெழுப்பத் தொடங்கின!

பளபளவென வெள்ளி வட்டங்கள் உதிர்ந்தன!

கூத்தர்களின் சரிகைத்தலைப்பாகைகள் மின்னின!

அவர்களின் மேலங்கிகளில் தொங்கிக்கொண்டிருந்த அடிமைக்குஞ்சங்கள் ஆர்ப்பரித்தன!

"தோமான் தேசத்து விடுதலைக்கு நாங்களே மூல முதல்வர்கள்" என்று கூட்டுக்குரல் எழும்பிற்று!

ஒவ்வொரு அடிமையின் முதுகும் தடவிக்கொடுக்கப்பட்டது!

எண்ணெய் தேய்த்து வெந்நீரில் குளிப்பது போன்ற ஒரு சுகம், அடிமைகளின் உடம்பில் படர ஆரம்பித்தது.

ஆடரங்கின் ரதங்கள் திசைகள் தோறும் பறந்தன!

"பரம்பரையாக நாம் கைக்கொண்ட ஆனந்தத் தத்துவத்தையொருவன் எதிர்க்கிருன்.

அவனைச் சிலர் ஆதரிக்கிருர்கள்!

அவர்களுக்குச் சமாதி தருவதே நமது முதல் வேலை."

என அந்த ரதங்களில் சென்ற போதகாதிபர்கள் புத்திமதி கூறினர்.

ஆயினும்—

தர்மத்தை நம்பி உண்மைகளைச் சொன்ன சிலர், தங்கள் கடமைகளைச் செய்தனர்.

"அடிமைகளே! தோமானிய அடிமைகளே!

தன்னை அர்ப்பணித்துக் கொண்டவனைத் தான் விடுதலைத் தேவி நேசிப்பாள்.

நம்மில் எத்தனைபேர் நம்மை அர்ப்பணித்துக் கொண்டோம்?"

என்ற கேள்வி, ஒரு பகுதியிலிருந்து கிளம்பிற்று!

"இருந்ததை இழந்தவர்கள் எத்தனைபேர்?

இல்லாததைப் பெற்றவர்கள் எத்தனைபேர்"

என்று அந்தக் கேள்வி தொடர்ந்தது.

"அடுத்தது என்ன? சிந்தித்துச் சொல்லுங்கள். அடுத்தது என்ன?"

என்று அந்தக் கேள்வி முடிந்தது.

வேட்டையாடப் புறப்பட்டு, நாட்டியமாடத் தொடங்கிய வீரர்கள், சற்று நின்று சிந்தித்தார்கள்.

அவர்கள் சிந்தனையைக் கண்ட ஒரு கூத்தனுக்குப் பயம் வந்தது.

"சிந்திக்காதே! சிந்திக்காதே! சிந்தனையைக் கட்டுப்படுத்திக் கொள்!"

என்று அவன் போதிக்க ஆரம்பித்தான்.

"மேய்ப்பனை நம்புங்கள்!

ஆடுகளே அவன் குரலைக் கேளுங்கள்!"

என்ருெருவன்-யோவான் சுவிசேஷத்தை விரித்து வைத்தான்.

முன்பு தங்கச்சுரங்கத்தைத் தேடிப்போன ஆடுகள், ஒரு பகுதியில் அந்தச் சுரங்கத்தைக் கண்டுபிடித்து—

ஏய்ப்பனிடம் கொடுத்தன.

ஏய்ப்பன் அதைத் தூக்கிக் காட்டி, "இதோ பாருங்கள் தங்கச்சுரங்கம்; தங்கம் சரமாரியாக வந்துகொண்டிருக்கிறது. நம் எதிரிகளை இனித் தங்கத்தாலேயே அடித்துக் கொல்வோம்."

என்று பொருள் விளக்கம் கொடுத்தான்.

"நமக்குள்ளேயே நம்மை எதிர்ப்பவர்கள், நம்மிடம் இருக்கும் தங்கத்தைக் கண்டதும் ஓடி ஒளிந்துகொள்வார்கள்."

என்று கூத்தாட்டரங்கில் காற்ருடிக்கொண்டிருந்த கூத்தர்கள் கூடி முழங்கினுர்கள்.

அந்த நேரத்தில், காற்று 'ஓ' வென்று இரைந்தது!

(அடுத்த பக்கம் பார்க்க)

— முன் பக்கத் தொடர்ச்சி —

வடிவமற்ற காலத்தேவன், ஒரு வடிவு கொண்டு அங்கே தோன்றினான்!

அடிமைகள் கூட்டம் அவனை உற்று நோக்கிற்று!

"காலத்தேவனே! காலத் தேவனே!

நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம் தெரியுமா?" என்று ஏய்ப்பன் துள்ளிக் குதித்துக் கேட்டான்.

"அதைக் காணத்தான் இங்கே வந்தேன்."

என்று சொல்லிவிட்டு அமர்ந்தான் காலத்தேவன்.

"சுயமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த துரோகிகளை நாங்கள் ஒழித்துவிட்டோம்.

காலத்தேவா! எங்கள் கூத்தாட்டரங்கம் இனிக் குதூகலமாக இருக்கும்.

தோமானுக்கு விடுதலை கிடைத்த பிறகு என்னென்ன சுகங்கள் கிடைக்குமோ, அவையனைத்தும் இப்போதே எங்களுக்குக் கிடைக்கின்றன."

—என்றான் ஒரு கூத்தன்.

காலத்தேவன் சிரித்தான்.

"சிறுவர்களே!" என்று ஆரம்பித்தான்.

"இல்லை நிறுத்து; நாங்கள் சிறுவர்களல்ல, தலைவர்கள்" என்றான் ஒருவன்.

காலத்தேவன் மீண்டும் சிரித்துவிட்டு—

"தலைவர்களென்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்பவர்கள் சிறுவர்களாகத்தான் இருக்கமுடியும்" என்றான்.

"நாங்கள் வெற்றி பெற்றவர்கள்" என்றொரு குரல் எழுந்தது!

"யாரிடம்? ருதுவானியர்களிடமா?"— காலத்தேவன் மேலும் தொடர்ந்தான்.

"கலாதேவியின் சீட கோடிகளே!

கூத்தாட்டரங்கின் சதுரங்கக் காய்களே!

சற்றுக் கோபமின்றி என்னைச் செவிமடுங்கள்.

உலகத்தைப் பார்க்கவேண்டிய கண்ணால், நீங்கள் உங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

கலகத்தை அடக்கவேண்டிய கையால், நீங்கள் கலகங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்!

கள்ளியும் முள்ளும் நிறைந்த பாதையைச் செப்பனிட வேண்டியவர்கள்—

கலாதேவியின் கால்களை வருடிக்கொண்டிருக்கிறீர்கள்.

கூட்டங் கூட்டமாகச் சத்தம் போட்டுச் சொன்னால், பொய்யே உண்மையாகி விடுமென்று நீங்கள்-மனமார நம்புகிறீர்கள்!

உங்கள் வாய் உங்கள் இருதயத்தில் இருக்குமானால், நீங்கள் மக்கள் நடுவே நிற்கமாட்டீர்கள்!

உங்கள் இருதயம் பன்னீரில் மிதக்கிறது-வாய் மட்டும் வெந்நீராகக் கொதிக்கிறது.

சூடான வார்த்தைகள், உங்கள் தொண்டையிலிருந்து புறப்படுகின்றன!

பாவம்! அடிமைகள்!

தங்கள் விடுதலை எண்ணத்தைக் கைதட்டித் தீர்த்துக் கொள்கிறார்கள்.

ருதுவானிய எஜமானர்கள் இந்த அடிமைகளின் கைகளில் மட்டும் இருந்திருந்தால்—

இவர்கள் தட்டிய தட்டிலேயே அவர்கள் இறந்திருப்பார்கள்.

உங்கள் நியாய புத்தியின் மீது எந்தக் களங்கத்தையும் நான் சுமத்தவில்லை!

நீங்கள் ஏழைகளாகவும்—குறைந்த தொகையினராகவும் இருந்தபோது எவ்வளவு பிணைப்பு உங்களுக்குள் இருந்ததென்பதை எண்ணிப் பாருங்கள்!

ஒன்றுமில்லாத போது தான் உறவு நெருக்கமாகிறது!

தெருவழியே ஒழுங்காகச் சென்று கொண்டிருந்த மனிதன், திடீரென்று ஒரு வெள்ளிக் காசைக் கண்டெடுத்து விட்டால்—

தெருமுழுக்கக் காசு கிடக்குமென்று அலைவதுபோல், நீங்களும் ஒரு சுகத்தைக் கண்டெடுத்துப் பல சுகங்களைத் தேடுகிறீர்கள்.

வீடே இல்லையென்றால் விசனம் வருவதில்லை.

ஒரு வீடு கிடைத்து விட்டால் மறுவீடு கேட்கிறது.

உங்களுக்கு மட்டுமல்ல—எந்தச் சராசரி மனிதனுக்கும் இதுதான் இயல்பு!

ஆனால் நீங்கள் சராசரி மனிதர்கள் அல்லவே?

தலைவர்களாயிற்றே?

சிந்திக்க வேண்டுமென்று உலகுக்குச் சொன்னீர்களே? நீங்கள் ஏன் சிந்திக்கவில்லை?

தோமான் தேசத்துக்காக முழுக்க முழுக்க ஈடு கொடுத்துக் கொண்ட ஒருவனையும்—அவனது நண்பர்களையும்ஒழித்துவிட்டதாக நீங்கள் பெருமைப் படுகிறீர்கள்.

நம்பாதீர்கள்! நம்பாதீர்கள்!

அவர்கள் சிலராகவும்—நீங்கள் பலராகவும் இருக்கலாம்.

யாரந்தச் சிலர்? ஒருவரிடமிருந்து ஒருவர் எதையும் எதிர்பார்க்காமலேயே ஒன்றுகச் சேர்ந்தவர்கள்.

நீங்களோவெனில்,—

ஒருவர் தோளில் ஒருவர் கையைப் போடும் போதே பைக்குள் என்ன இருக்கிறதென்று பார்ப்பவர்கள்.

அன்பாக அணைத்துக் கொள்கிறீர்களென்றால், இடுப்பைத் தடவுகிறீர்களென்று பொருள்.

'என் அருமை நண்பர்' என்று அழைத்து ஒருவன் பெயரை இன்னொருவன் சொன்னால்—

அடுத்தநாள் உதவிக்கு வரப் போகிறான் என்று அர்த்தம்.

நீங்கள் இல்லையென்று எனக்குச் சொல்ல வேண்டாம்; உங்கள் உள்ளங்களைத் தடவிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

சாம்ராஜ்யத்தின் சிற்றரசர்கள், மனோகரமான வாசனைத் திரவியங்களை மார்பிலே பூசிக் கொண்டு அரங்கங்களில் தோன்றி இறங்கிவிட்ட பிற்பாடு, அன்றைய வரிவசூல் எவ்வளவு என்றுதான் விசாரிப்பார்களாம்.

நீங்களும் அவ்வாறே!

உங்கள் உறவும் அப்படியே!

ஆனால் அவர்களோ வெனில், அரண்மனையை விட்டுக் காடு நோக்கிப் புறப்பட்ட சித்தார்த்தனைப்போல்—

அகம், புறம் இரண்டையும் சுத்தமாக வைத்துக்கொண்டு மாளிகையை விட்டு இறங்கி வந்த ஒருவனுக்கு நண்பர்களாக இருக்கிறார்கள்.

அவனை நீங்கள் சுலபத்தில் கேலி செய்துவிட முடியாது.

அவனது மதியின்மீது களங்கம் சுமத்தமுடியாது.

அந்த நகரத்தின் தந்தை உறுதியான உள்ளம் படைத்தவர்.

அங்கே ஒருவனது பாட்டுக் குரல் கேட்கிறது.

அவன் உங்கள் வேட்டுக் குரல்களை இலட்சியம் செய்ய மாட்டான்.

அவனுக்கு எதையாவது நீங்கள் வழங்கியிருந்தால், அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்!

அதன் பிறகும் அவனைப் பாருங்கள்!

தளராத தன்னம்பிக்கை கொண்ட அவர்களை நீங்கள் ஒதுக்கி விடுவது எளிதல்ல.

நீங்கள் ஆடத் தொடங்கிய ஆட்டங்களில்கூட உங்கள் வளர்ச்சிக் கட்டம் முடிந்து விட்டது.

ஆனால் அவர்கள் இன்னும் வளருவார்கள்.

நீங்கள் உயிரோடு இருந்து அதைக் காணவேண்டும்.

நீங்கள் இளைஞர்கள்!

போர்க்களத்திற்குப் போனால் தானே உங்களுக்குச் சாவு வரும்?

நீங்கள் உயிரோடு இருந்து கவனிப்பீர்கள்.

அவர்கள் ஒவ்வொரு நாளும், அரிசியாக இருந்து சோறாகச் சமைகின்றார்கள்.

அவர்களை யாரும் உண்பார்கள்.

ஆனால் நீங்களோ,—

அரிசியாகவும் இல்லை;சோறாகவும் இல்லை.

அரைவேக்காடுதான் நீங்கள் வெந்திருக்கிறீர்கள்.

உங்களைச் சாப்பிடுவதா? காயப்போடுவதா? என்பதே பிரச்னை.

தோமானியர்களே!

இந்தக் கிழவன் மீது நீங்கள் கோபப் படாதீர்கள்!

காலக் கிழவன் நடக்கப் போவதைச் சொல்கிறான்.

உங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் உறவு, எவ்வளவு காலம் தொடருமென்று எனக்குத் தெரியும்.

இன்னும் ஒரு பருவம் மாறும் போது நான் உங்களைச் சந்திப்பேன்.

அப்போது, உங்களுக்குள்ளாகவே நீங்கள் அடிதடி நடத்திக் கொண்டிருப்பீர்கள்.

ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்துவிட்டு—

அவரது மேலங்கியைப் பங்கு போட முயன்ற சேவகர்கள், தங்களுக்குள்ளாகவே சண்டையிட்டுக் கொண்டது போல் நீங்களும் சண்டையிடுவீர்கள்.

சரியாகவோ தவறாகவோ, பொற்காசுகள் நிறைந்த பொக்கிஷம் உங்கள் கையில் இருக்கிறது.

பொக்கிஷ மென்ற அடுப்பில் போட்டியென்ற புகை கிளம்பி அடிதடியில் வந்து முடியும்.

இதில் நான் சொல்வது தப்பாது!

உங்கள் ஒவ்வொருவருடைய இருதயமும் எனக்குத் தெரியும்!

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான தேவையிருக்கிறது.

கொஞ்ச காலத்திற்கு நீங்கள் அதைப் பரிமாறிக் கொள்வீர்கள்.

கொடுப்பவர்கள் சிலராகவும்-கேட்பவர்கள் பலராகவும் இருந்தால், முடிவென்ன ஆகுமென்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

நான் இன்னும் உங்களுக்குச் சொல்லவேண்டியது பாக்கியிருக்கிறது.

எதையும் எதிர்பாராதவனும்-எந்த முடிவையும் பொருட்படுத்தாதவனுமான ஒருவனே இந்த உண்மைகளை உங்களுக்குச் சொல்லமுடியும்.

நான் இங்கே வரும்படியும்-இவற்றை உங்களுக்குச் சொல்லும்படியும் நீங்களே உண்டாக்கி விட்டீர்கள்.

ஜெயகோஷம் போட்டுக் கொண்டிருக்கும் அடிமைகளை ஏமாற்றிவிடாதீர்கள்.

காசை உள்ளே போட்டவுடன், சீட்டை வெளியே தள்ளும் எந்திரம்போல்—

உங்கள் பெயரைக் காதில் கேட்டவுடன், ஜெயகோஷம் போடும் பரிதாபத்துக்குரியவர்களை இனியாவது காப்பாற்ற முயலுங்கள்!

தோமானியக் குடிமக்களே!

உங்களுக்கு இறுதியாக ஒன்றே ஒன்று சொல்லுவேன்.

கொலை உட்பட, எந்தப் பாவத்திற்கும் மன்னிப்பு உண்டு.

ஆனால்—

ஒரு புனிதமான காரியத்தைத் துவங்கிக் கெடுத்த பாவத்திற்கு மன்னிப்பு இல்லை.

தோமானிய விடுதலை இயக்கம் தனக்குள்ளேயே அடித்துக் கொண்டு செத்தது.

சுகபோகத்தில் மூழ்கி விடுதலை முயற்சியைக் கெடுத்தது.

ஆட்டபாட்டங்களில் ஈடுபட்டு ஆரவாரத்தைக் குறைத்துக்கொண்டது.

அதன்மூலம் அடியோடு ஒழிந்தது.

அதன்பிறகு 'விடுதலை' என்ற வார்த்தையிலேயே தோமானியர்கள் நம்பிக்கை இழந்தார்கள்.

என்று இந்தச் சரித்திரம் முடியுமானால்—

ஒவ்வொரு தலைமுறையும் உங்களைப் 'பாவிகள்' 'பாவிகள்' என்றே பழிக்கும்!

நிரந்தரமாக உங்கள் பாவத்திற்கு மன்னிப்பில்லாமல் போய் விடும்."

காற்று மீண்டும் 'ஓ'வென்று இறைந்தது.

காலத்தேவன் அதில் கலந்து மறைந்தான்.

கூத்தரும் பிறரும் எழுந்து நடந்தனர். ★

தேவி

காளி பக்தர் ஒருவரின் கண்மூடித்தனமான நம்பிக்கையால் விளைந்த விபரீதத்தைச் சொல்லும் இச்சிறுகதை—பிரபல வங்காள ஆசிரியர் **பிரபாத் குமார் முகர்ஜி** எழுதியது. இதைத் தமிழில் தந்திருப்பவர் **ஆ. மாதவன்.**

முன்பனிக் காலத்தின் நீண்ட இரவிற்கு முடிவேஇல்லையென்று தோன்றியது. உமா பிரசாதிற்கு தூக்கம் வரவில்லை. அருகில் போர்வையினுள் தன் மனைவியை தேடிப் பார்த்தான். காணவில்லை. அவள் படுக்கையின் ஓரத்திலே சுருட்டிக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தாள். இன்னும் பதினாறு வயதுகூட நிரம்பப் பெருத சின்னஞ்சிறு பெண் அவள். அவன் மெல்ல அவள் அருகில் சென்று, போர்வையை இழுத்து அவளுக்கு நன்ருகப் போர்த்தி விட்டான்.

உமாபிரசாது இருபது வயது இளைஞன். சமீபத்தில்தான் சமஸ்கிரதத்தை விட்டு, பார்சிமொழி பயின்று கொண்டிருந்தான், தாயில்லாதவன். தந்தை காளிகிங்கரராய் பெரிய மேதை. பக்திமான் கிராமத்து மக்களின் மதிப்பிற்குரியவர், குறிப்பாக தேவி உபாசனையுடையவராதலால் கிராமத்தில் எல்லோரும் அவரைக் கடவுளாகவே வழிபட்டனர்.

உமா பிரசாதிற்கு அது தேன்நிலவுக் காலம். மணமாகி ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் முதன்முதலாக அவன் மனைவியைசந்திக்கிருன். திருமணத்தின் போது மனைவி தயாமயிக்கு பதினேரு வயது தான் ஆகியிருந்தது.

அவன், மனைவியின் கன்னத்தை மெதுவாக வருடினன். தூங்குகிருள். தூங்கட்டும் என்ற நினைவுடன் மெல்ல மெதுவாக அவள் கன்னத்தில் முத்தமிட்டான். தயாமயி புரண்டு படுத்தாள்.

விழித்துக்கொண்டிருக்க வேண்டும், என்ற எண்ணத்துடன் அவன் மெல்ல, அவளை அழைத்தான்;

"தயா !"

"உம் ?"

"விழித்துக்கொண்டுதான் படுத்திருந்தாயா ?"

"இல்லை தூங்கினேன்."

"தூக்கமா ? அப்படியென்ருல் நான் அழைத்தது எப்படி உனக்குக் கேட்டது ?"

"நீங்கள் அழைத்ததும் விழிப்பு வந்தது"

"நான் அழைத்தேனு ?"

"ஆமாம். நீங்கள் என்னை..."

"நான் உன்னை...என்ன ? சொல்லேன் ?"

"சொல்லமாட்டேன்"

"சொல்லாமல் விடமாட்டேன்"

"ஐயோ இதென்ன தொல்லை...நீங்கள் என்னை முத்தமிட்டீர்கள்...அப்பொழுதுதான் விழித்துக் கொண்டேன்..." தயாமயி புரண்டு படுத்துக் கொண்டு, முகத்தை பொத்திக் கொண்டாள்.

தூக்கமற்ற இரவு- விடிய இன்னும் நேரமிருந்தது. இருவரும் தீராத கதைகளாக எதைப்பற்றியெல்லாமோ பேசிக்கொண்டார்கள்."

"நான் வேலைக்காக வெளியூர் போகிறேன்." என்ருன், உமா பிரசாது.

"உங்களுக்கு எதற்காக வேலை ? வீடிருக்கிறது நிலபுலன்கள் இருக்கின்றன. இட்ட வேலைக்கு பணியாட்கள் இருக்கிருர்கள். இங்கென்ன குறை உங்களுக்கு ? நீங்கள் ஏன் வேலைக்குப் போக வேண்டும் ?" தயாமயியின் குரலில் வேதனை ஒலித்தது.

"எனக்கு குறையிருக்கிறது தயா !"

"என்ன குறை ?"

"என் குறையை நீ பகிர்ந்து கொண்டால், பிறகு எனக்கேது குறை ?"

கணவனுக்கு அப்படி என்னகுறை வந்துவிட்டதென்று அவள் எண்ணிப் பார்த்தாள். வெகுநேரம் யோசனை செய்தும் எதுவுமே அவளுக்குப் பிடிபடுவதாக இல்லை. கடைசியில் அவளுக்கு ஒரு குறும்பான எண்ணம் தோன்றியது.

"இப்பொழுது புரிந்து கொண்டேன். உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை. அதுதானே குறை- ?" என்று கேட்டாள்.

உமாபிரசாது அவளை அப்படியே இறுகத் தழுவி ஆயிரம்முறை முத்தமிட்டான். பிறகு மெல்ல அவள் காதோடு சொன்னுன்; "என்ன அசட்டுப் பெண் நீ, உன்னையா எனக்குப் பிடிக்கவில்லை யென்கிருய் ?...உம்... ஒருவகையில் உன்ருல்தான் எனக்கு மனக்குறையே ஏற்பட்டது. பகல் முழுதும் உன்னைப் பார்க்கவே முடிவதில்லை. இரவில் மட்டும் சந்திப்பதால் எனக்கு நிறைவே இல்லை. என் எண்ணங்கள் அத்தனையும் ஓட்டைக் கனவுகளாகப் போகின்றன. நான் எங்காவது வேலை தேடிக் கொண்டால், உன்னையும் அங்கே அழைத்துக் கொண்டு போவேன். பிறகு, இரவும் பகலும் நாம் ஒன்ருகவே இருக்கலாமில்லையா ?" என்ருன்.

"வேடிக்கைதான் போங்கள். பகலிலும் என்னுடனேயே இருந்தால், பிறகு எப்பொழுது தான் வேலைக்குப் போவதாம் -?"

"வேலைக்குப்போவேன்; போய்விட்டு வேகமாகத் திரும்பிவிடுவேன்."

அது நல்ல யோசனையென்று அவளுக்கும் தோன்றியது. ஆயினும் இடையே ஒரு சந்தேகம் :

"ஆமாம் நீங்கள் அழைத்துக் கொண்டு போவீர்கள்-ஆனுல் இங்கே என்னை அனுப்பிவைக்க வேண்டுமே? '

"இங்கிருந்து நேராக அழைத்துக் கொண்டு போவதாவது ? உன் தாய் வீட்டிற்கு நீ போவாயல்லவா ? அங்கிருந்து உன்னை அழைத்துக் கொண்டு போவேன்."

இதைக் கேட்டதும் அவளுக்குச் சிரிப்பாக இருந்தது. "நல்ல தந்திரம் தான் !

எத்தனை நாட்கள் அப்படி தனியாக இருக்கமுடியும் !"

"எத்தனையோ நாட்கள் !"

"சரி, அப்படியானுல் நம் கோக்காவைப் பிரிய வேண்டியிருக்குமே. அவனை விட்டுவிட்டு நம்மால் இருந்துவிட முடியுமா ?"

உமா பிரசாத் மெல்ல அவள் காதருகில் வந்து; "அதற்கிடையே உனக்கும் ஒரு பாப்பா பிறந்துவிடுவானே ?" என்ருன். இதைக் கேட்டதும் அவள் நாணத்தால் முகத்தைப் பொத்திக் கொண்டாள். இருட்டில் நாணத்தால் சிவந்த அவள் முகத்தை அவன் காணவில்லை.

கோக்கா என்பது உமா பிரசாதின் அண்ணன் தாராபிரசாதின் குழந்தை. வெகு காலத்திற்கு பின்னர் அந்தக் குடும்பத்தில் பிறந்த சின்னஞ்சிறு மழலைச் செல்வம். வீட்டில் எல்லோருக்குமே அவனிடத்தில் அலாதியான அன்பிருந்தது. ஒருத்தர் விட்டு ஒருத்தராக எப்பொழுதும் அவனை தூக்கி வைத்துக்கொண்டிருப்பார்கள். தன் மகனுக்கு இத்தனை பெருமையிருப்பதில், தாராபிரசாதின் மனைவி அரசுந்தரிக்கு பெருமை தலைகொள்ளாமலிருந்தது.

"ஆமாம், இன்று கோக்கா ஏன் இன்னும் வரவில்லை ?' எதையோ நினைத்துக்கொண்டதுபோல தயாமயி கேட்டாள்.

தினமும் விடியும் பொழுதில், கோக்கோ தயாமயியின் படுக்கையில் வந்து படுத்துக்கொள்வது வழக்கம். குடும்பத்தில் பணியாட்கள் ஏராளமான பேர் இருந்தாலும் கோக்காவிற்கு தயாமயி மேல் ஒரு தனிப் பற்றுதல் இருந்தது. அவனுக்காக எதைச் செய்ய வேண்டுமானுலும் தயாமயி தான் வர வேண்டும். அவள் ஊட்டினுல்தான் அவன் உணவுண்பான். அவள் எண்ணெய் தேய்த்துவிட்டால் தான் அவன் நீராடப் போவான். எதற்கும் அவள் வேண்டும். விடியக் கருக்கலிலேயே அவள் அறை வாசலில் வந்து அழுதுகொண்டு நிற்பான். தயாமயி போய் வாரியணைத்து படுக்கையில் தன் அருகில் படுக்க வைத்துக்கொண்ட பின்னர்தான் அவன் அழுகை ஓயும். இந்த வாடிக்கை நிகழ்ச்சியின் பிரகாரம் அன்று அவன் வரவில்லை.

"குழந்தைக்கு உடம்பிற்கு ஏதேனும் வந்துவிட்டதோ என்னமோ ? இல்லை பொழுதுதான் இன்னும் விடியவில்லையா ?"

உமாபிரசாத் எழுந்து போய் சன்னலை திறந்து பார்த்தான். வெளியே, இளமாவும் தென்னைகளும் நிறைந்த தோட்டம் அமைதியில் குளித்த நிலவில் பளபளத்தது. தயாமயி கணவனின் அருகில் வந்து நின்ருள். "விடிவதற்கு இன்னும் நேரமிருக்கும்போலிருக்கிறது" என்ருள்,

பனிக்காலத்து குளிர்காற்று உடலில் விலிர்ப்பை உண்டாக்கியது. மங்கிய பால்வண்ண நிலவில் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு- புரியாக்கனவில் அப்படியே நின்று கொண்டிருந்தனர்.

"இன்று ஏனே என் மனதில் நிம்மதியில்லை. கோக்காகூட இன்னும் வரவில்லை. ஏன்தான் இந்தப் பரபரப்பு என்று தெரியவில்லை" தயாமயி மெல்ல, பயத்தில் நடுங்கிய வார்த்தைகளாகப் பேசினுள்.

"விடிவதற்கு இன்னும் பொழுதிருக்கிறது. இரவு வெகு நேரம் விழித்துக் கொண்டிருப்பான் குழந்தை. மெல்லத்தான் எழுந்து வரட்டுமே...ஆனுல் உன் மனதின் பரபரப்பு அதனுல் அல்லவென்று எனக்குத் தெரியும். என்னிடமே மறைக்கப் பார்க்கிருய் ?" என்று சிரித்தான் உமாபிரசாத்.

"என்ன தெரிந்துகொண்டீர்களாம் ?' அவள் பார்வை-வானில் சரிந்த நிலவு வட்டத்தின் சூன்யத்தில் லயித்திருந்தது.

"நான் வெளி நாட்டிற்கு போகிறேன் என்றதினுல்தானே உனக்கு இந்தப் புரியாத தவிப்பு ?" அவன் அவளை தன் மார்போடு அணைத்துக் கண்களையே உற்றுப் பார்த்தான். தயாமயி பெருமூச் செறிந்தாள்.

"என்ன காரணமென்று தெரியவில்லை, இனி உங்களை காணமுடியாதென்ற ஒரு பலவீனமான எண்ணம் என்மனதில் புகுந்து விட்டது......"

வானச் சரிவில் வெள்ளி நிலவு ஒளி மங்கிச் சரிந்திருந்தது. உமா பிரசாதின் முகமும், மனைவியின் சொற்களால் வாடிற்று.

பின்னும் சிறிது நேரம் இருவரும் அப்படியே நின்ருர்கள். நிலவு மறைந்து போயிற்று. செடிகொடிகள் இருட்டில் உடல் மறைத்துக் கொண்டன. ஜன்னலை மூடிவிட்டு இருவரும் படுக்கையில் வந்து படுத்துக் கொண்டனர்.

எங்கோ ஒருசில பறவைகளின் மெல்லிய கலகலப்பு லேசாகக் கேட்டது. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டு நிலை மறந்து உறக்கத்திலாழ்ந்தனர்.

★

மூடிய சாளரத்தின் இடைவழியே காலைப் பகலவனின் ஒளிக்கதிர்கள் அறையினுள் பரவின. அவர்கள் தூக்கம் இன்னும் கலையவில்லை,

திடீரென்று வெளியேயிருந்து, உமா பிரசாதின் தந்தை காளிகிங்கரரின் அழைப்புக்குரல் கேட்டது.

"உமாபிரசாத் !"

முதலில் தயாமயிதான் விழித்துக் கொண்டாள். அவள் கணவனை எழுப்பினுள்.

வெளியேயிருந்து அழைப்புக்குரல் மீண்டும் கேட்டது. குரலில் படபடப்பு இருந்தது. விடிந்ததும் விடியாததுமான இந்த வேளையில் எப்பொழுதுமே அவர் அவனை அழைத்ததில்லை. குரலில்கூட வித்தியாசம் தெரிகிறது.

(தொடரும்)

சிறுவர் கதைப் புத்தகங்களுக்கு

ஏஜண்டுகள் தேவை

ஏமாந்த பசு	7 ந. பை.
எமனின் தந்திரம்	7 ந. பை.
கூழாங்கல் பாயசம்	8 ந. பை.
அவள் ஓர் அசடு	10 ந. பை.
எருது கட்டிய வீடு	10 ந. பை.

ஏஜண்டுகள் 33⅓ %. கழிவு நீக்கி முன் பணம் அனுப்பவும் தபால் செலவு இனும்.

விபரங்களுக்கு

சிறுவர் பண்ணை

சென்னை-5.

வாழ்க கபிலர் - பரணர்!

வளமார்ந்த மலைநாட்டுத் தலைவன், வையாவிக் கோப்பெரும் பேகன். அவன் வாழ்ந்த நல்லூர் 'வையாவி' என்னும் பழம் பெயர் கொண்டது. 'ஆவியர்' குடியாம் தமிழ்ப் பெருங் குடியினர் 'வாழ்விடம்' என்று பொருள் பட வையாவி' என்ற பெயர் கொண்டது என்பர் ஆராய்ச்சியாளர்.

'ஆவியர் குடி' ஆவிகுடி என்றும் ஆவிநன்குடி என்ற அடை சேர்த்துக் கூறுதலும் மரபாம்.

ஆவிநன்குடி ஒரோ வழி 'ஆவினன் குடி' என்று மருவி வழங்கலாயிற்று. பிற்றைக் காலத்தில் புராண மரபும், பக்தி மார்க்கமும் பெருமைப்படுத்தப் பட்டபோது, ஆவினன்குடி முருகக் கடவுளின் துறவுக் கோலத் திருப்பதியாயிற்று. திருப்பதிகள் அனைத்தையும் 'திரு' அடை மொழி சேர்த்துக் கூறுகின்ற வழக்கம் ஏற்பட்டபோது, ஆவினன்குடிமட்டும் விலக்கப்படுமா?

அதிலும் 'திரு' சேர்த்து திருவாவினன்குடியாயிற்று. "திருவாவினன் குடியிற் சித்து விளையாடி வந்த முருகா "என்றும் "ஆவினன்குடி வாழ் வான தேவர்கள்" என்றும் புலவர்கள் பாடல் புனைந்தனர்.

தமிழும் அதன் தொன் மரபும் தலை மயங்கித் தடுமாற்றம் பெற்ற அண்மைக் காலத்தில், திருவாவினன்குடியும் மறைந்தொழிந்து. அங்கு கோவில் கொண்ட பழனியாண்டவன் பெயரால் 'பழனி' என்று வழங்கப்படுகிறது.

உண்மையில், பழனியாண்டவர் உருவச்சிலை முருகனுடைய சிலையன்று. அஃது, சமண முனிவர்களின் 'தீர்த்தங்கரர்' சிலையாகவோ புத்தர் சிலையாகவோ இருத்தல் வேண்டும். இதனை, ஆராய்ச்சியாளர் சிந்தனைக்கு ஒதுக்கி விடுவோம்,

இற்றை நாளில் 'பழனி' என்று குறிக்கப்படும் இடமே, பண்டை நாட்களில், மாவீரன்—மடம்படு வள்ளல்---ஆவியர் தலைவன்—வையாவிக் கோப்பெரும் பேகனின் மலைநாட்டுப் பகுதியாம்.

பேகன், ஆவினன் குடி மலைநாட்டுக்குச் சிற்றரசன். தமிழுக்குத் தலை வணங்கி விலையளித்த பெருந்தகையாளரில் ஒருவன், குளிரால் நடுங்கிய மயிலுக்குத் தான் போர்த்தி இருந்த போர்வையை மூடியதால் 'மடம்படு கொடையாளன்' என்ற பெயர் பெற்றவன்.

அவனுடைய வள்ளன்மையை வியவாத புலவர் மிகச்சிலரே.

மனிதன் எவ்வாற்ருனும் தவறிழைக்கா நல்லவனுய் இருத்தல் அரிது. இந்த விதிக்குப் பேகனும் விலக்கில்லை,

பேகனின் இல்லக்கிழத்தி தமிழகத்தின் உரைசால் கற்பின் திருவுருவம்—பெயர் கண்ணகி. சீரிய பண்பாலும், கூரிய மதியாலும், சிலப்பதிகாரக் கண்ணகிபோலவே இருந்தாள். இல்லற வாழ்விலும் சிலப்பதிகாரக் கண்ணகிக்கும் வையாவிக் கண்ணகிக்கும் மிகப் பெரும் ஒற்றுமை.

சிலப்பதிகாரக் கண்ணகிக்கு மாதவி என்பாள் வாழ்விற் குறுக்கிட்டாள். வையாவிக் கண்ணகியின் வாழ்வில் நல்லூர்ப் பரத்தை என்பாள் குறுக்கிட்டாள். கோவலன் இசைத்தமிழிலும் நாடகத்தமிழிலும் நெஞ்சைப் பறிகொடுத்தவன். பேகன், இசைத்தமிழிலும் இயல்தமிழிலும் உள்ளத்தைப் பறிகொடுத்தவன்.

கோவலன், மாதவி வீட்டிலேயே தங்கி விட்டது போல், பேகன், நல்லூர்ப் பரத்தை வீட்டிலேயே தங்கி விட்டான்.

கோவலன் வணிகன் ஆதலால் அவனைத் தேடுவாரில்லை. பேகன், ஆவியர் குடிகளின் தலைவனுய், சிற்றரசனுய், இருந்ததுடன், வரையாது வழங்கும் வள்ளலாய்-தமிழகமும் தமிழுமறிந்த புரவலனுய் இருந்தான். எனவே. புலவர் பெருமக்கள் நாள் தோறும் அவனைப்பாடி வருவர்-தேடி வருவர். விறலியர் ஆடி வருவர்-பாணர்கள் பாடிவருவர்.

பேகன் சென்றவிடமெல்லாம் தமிழ் முழக்கமும் தேடிச் செல்லும். பேகன் அரண்மனையில் இரவும் பகலும் அலை கடல்போல் தமிழ்ஓசை ஒலித்துக் கொண்டே இருக்கும்,

அத்தகைய பெருவள்ளல்-பேராண்மை மிக்க பெருந்தகை-பரத்தையொருத்தியின் மையல் வலையிலே சிக்கி-மாசற்ற கற்பின் நல்லாள் கண்ணகியைத் தனி வீட்டிலிருக்கும்படி துறந்து. பரத்தையின் வீட்டிலேயே தங்கி விட்டான் என்ருல், அவன் மீது நன்மதிப்புக் கொண்ட நல்லாரின் நெஞ்சம்-அவனுடைய பெருமைகளைப் பிரபந்தமாகப் பாடிய புலவர் பெருமக்களின் உள்ளம்-என்ன பாடுபடும்? அதனை எழுதி உணர்த்தவே முடியாது!

புலவர் பெருமான் கபிலர் ஒரு நாள் பேகனைக் காண வேண்டுமென்று புறப்பட்டார். அவருக்கு பேகனுடைய பரத்தைமை - இடமாற்றம் எதுவும் தெரியாது. எனவே, பேகனை முன்னல் எந்த அரண்மனையில் கண்டாரோ, அதிலேயே இப்போதும் இருப்பான் என்ற முடிவுடன் போனுர்.

பேகன் இருந்த இடம் மலைமீது இருந்த ஊராதலால், மலையில் ஏறிச் சென்ருர். வழியில் மலை வாழ்நரில் ஒரு பிரிவினராகிய குறவர் குல மக்கள், மழை பெய்விப்பான் வேண்டி கடவுளுக்கு பலி முதலியன கொடுத்து, வழிபடும் காட்சிகளைப் பார்த்துக்கொண்டே பேகனுடைய அரண்மனைக்கு வந்து விட்டார். அரண்மனை வாசலில் நின்று பேகனின் பெருமைகளை இசைக்கும் செந்தமிழ் வாழ்த்துப் பாடல்களைப் பாடினுர். பேகன் அங்கிருந்தால் அவருடைய பாடலைக் கேட்டு எதிர்கொண்டழைக்க ஓடோடி வந்திருப்பான். அவன் அங்கில்லாமல் பரத்தை வீட்டிலன்ருே இருக்கிருன்! ஆகவே, அவரை எதிர்கொண்டு அழைக்க யாருமில்லை. ஆனல், அழுது அழுது கண்ணீர் மூழுவதும் மார்பிலே சிந்தி, முலையகம் ஈரமாக, புல்லாங்குழலில் அவல இசை இசைப்பதுபோல் இனிய அழுகை ஒலியுடன், மங்கைநல்லாள் ஒருத்தி வந்து கபிலர்முன் நின்ருள். அவரைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை நிறுத்தமுடியாமல் ஆரவாரத்துடன் விம்மிக் கிளம்பிவிட்டது. அப்படி அழுதவள் பேகனின் பெறற்கரும் மனைவி கண்ணகிதான். கபிலருக்கும் அவள் யாரென்று நன்ருகத் தெரியும். ஆனல், இப்போது அவளுடைய துயரத்திற்கு காரணம் என்ன? பேகன் எங்கே? யாரிடம் விசாரித்தறிவது? கபிலர் ஊரெல்லாம் திரிந்து விசாரித்துப் பேகனின் பேதைமையை அறிந்து கொண்டு பேகனைச் சந்திக்க அவன் இருக்குமிடத்திற்கே போய்ச் சேர்ந்தார். பேகன் கபிலரைக் கண்டவுடனே வழக்கம் போல் வரவேற்ருன் உபசரித்தான் - வந்த காரியம்பற்றி வினவினுன்! கபிலர் சொன்னுர்; "நான் வந்தது கூட முக்கியம் இல்லை. என்னுடைய சுற்றத்தார்கள் தொலை தூரத்திலிருந்து வந்திருக்கிருர்கள். அவகளுடைய பசியைப் போக்குவதற்கு ஏதாவது பணம் பெற்று போகலாம் என்றே வந்தேன். பெரிய முரசத்தில் கடிப்பால் அடிப்பது போன்ற பேரொலியுடன் அருவி விழும் உனது வளஞ்சார் மலைகளைக் கடந்து, உன் அரண்மனைக்குப் போனேன். அங்கே ஒரு பெண்ணரசி கண்ணீரும் கம்பலையுமாக வாசலிலே வந்து நிற்கிருள் 'அவள்யார்' என்பதைத் தெரிந்து கொள்வதே இப்போது எனக்கு முக்கியம் "என்ருர் கபிலர். பேகனுல் இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? "அப்படி அழுதவள் எனது மனைவிதான்" என்ருல் புலவர் என்ன நினைப்பார்? "பேசாமல் இருந்தால் பிழையொன்றும் இல்லை" என்று பேசாதிருந்தான். கபிலர் என்ன செய்வார்? வீணே திரும்பினுர்.

எம். எஸ். இராமசாமி

அதன்பிறகு பேகனின் ஒழுக்கக் கேடு நாடறிந்த ஒன்ருகி விட்டது. புலவர் பெருமான் பரணர் கேள்விப் பட்டார். பரணருக்கு பேகன் பேரிலும் அவன் மனைவி கண்ணகி பேரிலும் மிகுந்த அபிமானம் உண்டு. எனவே, அவரால் இதைக் கேள்விப் பட்ட பிறகு வாளா இருக்க முடியவில்லை.

நேராக பேகனுடைய அரண்மனைக்கே போய் முதலில் விசாரிக்க வேண்டும் என்று கருதினுர்.

ஒரு நாள் இருள் சூழ்ந்து வரும் மாலை நேரம் பேகனுடைய அரண்மனை வாசலில், பரணர், கையிலே சிறிய யாழைமீட்டி பேகனுடைய புகழ்ப் பாடல் ஒன்றை 'செவ்வழி' என்னும் பண்ணுடன் பாடினுர். கண்ணகி வழக்கம்போல் அழுதுகொண்டே பரணரின் எதிரில் வந்து நின்ருள். புலவருக்கு கண்ணகியின் மீது அபிமானம் உண்டு-யாரென்பது தெரியும் - என்ருலும், பேசிப் பழக்கம் இல்லை! எனவே, தெரியாதவர் கேட்பதுபோல் கண்ணகியைக் கேட்டார். "இளம் பெண்ணே! எங்கள் உயரிய நண்பன்-வெம்போர் மறவன்-பேகனுக்கு நீ உறவினளோ? யார் நீ?" என்ருர். செங்காந்தள் மலர் போன்ற விரல்களால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அவள் சொன்னுள்: "புலவரேறே! உங்கள் நண்பருக்கு நான் உறவினள் அல்லள். உங்களுடைய நண்பரான பெரும்புகழ்ப் பேகன்; முல்லை மலரை வேலியாகக் கொண்ட நல்லூரின்கண்; ஒல்லென்று ஒலிக்கும் தேரில் ஏறிக்கொண்டு என்போல் மங்கை ஒருத்தியின் மையலால் வருகிருர் என்று, சொல்லிக்கொள்வார்கள்!" என்ருள் அப்பூவை நல்லாள். இதனைக் கேட்ட பரணருக்கு நெஞ்சம் சஞ்சலத்தில் ஆழ்ந்தது.

நேராகப் பேகன் இருக்கும் பரத்தை வீட்டுக்கே போனுர். தான் கண்டவைகளை அப்படியே சொல்லத் தொடங்டனுர்:-

நெறியறிந்த நல்லோனே! அறங் கனிந்த மறத்தலைவ! இல்லை என்று வந்தவர்க்கெல்லாம் 'இல்லை' என்னுமல் வழங்கும் ஈகையாள! மழையில் நனைந்த மயிலுக்கு போர்வையை ஈந்த நீயா இத்தகைய காரியம் செய்யத் துணிந்தாய்? உலக மெல்லாம் உன்னை அருளாளன் என்று போற்றும் போது, உன்னையே உயிராகக் கொண்டிருக்கும் அந்தப் பெண் கொடியாள் கண்ணகிக்கு மட்டும் நீ கொடியவனுக நடப்பது அறமா?

நான் உன்னைத் தேடிஅரண்மனைக்குப் போனேன். நீலநறுங் குவளை மலர் போன்ற மையுண்ட கண்கள், அழுது அழுது அவள் மார்பில் கிடந்த மணிப் பூணூரம் அத்தனையும் நனைய எதிரில் வந்து நின்ருள் அந்தப் பொற்பாவை. எனக்கு அடையாளமே தெரியவில்லை. "யாரம்மா நீ? எங்கள் பேகனுக்கு வேண்டியவளோ" என்றேன். "நான் உங்கள் பேகனுக்கு வேண்டியவள் அல்லள், என்போல் ஒருத்தியை வேண்டி நல்லூரில் வருகிருர் என்று, சொல்லக் கேட்டிருக்கிறேன்" என்ருள், அவள். "நீ இந்த அளவுக்கு அந்த மங்கை நல்லாளை நொந்து போகச் செய்தது அருளல்ல-அறமல்ல-நெறியல்ல - புகழல்ல - உடனே அவளிடம் போய், அவளுடைய துயரத்தை மாற்றியாக வேண்டும்" என்ருர். பேகனுடைய தவற்றை, கபிலரும் பரணரும் நேர்முகமாக, மறைமுகமாக இடித்துணர்த்தும் திறம், எண்ணி எண்ணி இன்புற்று-வியந்து பாராட்டத் தக்கது. இந்தக்கருத்துக்களை-இடித்துரை வன்மையை-வானமுள்ளமட்டும், வைய முள்ளமட்டும் எடுத்து சொல்லிக் கொண்டு (புறம் 143-144-ம்) செய்யுட்களிருக்கின்றன. வாழ்க கபிலர் பரணர்.

★

ஏஜெண்டுகள் தேவை
கர்பத்தடை
12 வித விளக்கங்கள்
விலை 25 ந.பை V. P. செலவு இலவசம் கமிஷன் 33%
தனிப்பிரதி, மாதிரி வேண்டுவோர் 6 ந. பை. அனுப்புக
கவியரசு பதிப்பகம், சென்னை-15
'சென்னை நகரில் எங்கும் கிடைக்கும்.

விழியைக் கொடுத்தான்-அவள் வெறியைத் தந்தாள்

உருவிய வாளையே உறையிலிடாது உலகத்தைக் கதிகலக்கிக் கொண்டலைந்த மாவீரர்கள் - பிணமலைகளைக் குவித்துத் தங்கள் பிரதாபங்களைக் காட்டிய ரணகளச்சூரர்கள் - ரத்த ஆறு பெருக்கெடுத்தோடும் யுத்தகளங்களிலிருந்து எழும் அவல ஒலிகளைக் கேட்டுக் கேட்டுப் புளகாங்கிதமடைந்த போர் வெறியர்கள்-வெற்றிகளோடு மட்டுமே விளையாடிப் பழக்கப்பட்ட வீரவேங்கைகள்—

இவர்கள்கூட;

கொல்லவரும் அம்பளவு விழியும் - கிளிகள் கொத்தவரும் செம்பவள இதழும்-மெல்லவரும் தென்றல்போல் இடையும் - காற்றில் மிதந்துவரும் பஞ்சுபோல் தனமுங்கொண்ட சின்னஞ்சிறிய கன்னிகள் முன்னால், தெம்பிழந்து வயதிழந்து - செயலிழந்து திறனிழந்த பின்னும், கைகட்டி வாய்பொத்தி-கட்டுண்டு நின்றிருக்கின்றனர்.

ஏன்தான் நின்றனரோ—அங்கே

என்னதான் கண்டனரோ ?

யாராலும் - எந்தப் போராலும் வெல்லமுடியாதென்று வீறுகொண்டு நின்ற கலிங்கத்தை, வென்று வீழ்த்தியபின் - சொல்ல முடியாத வேதனையை அநுபவித்து உணர்ந்து-வருந்தித் திருந்தி-வாளையும் வேலையும் களத்திலேயே வீசிவிட்டு - 'புத்தம் சரணம் கச்சாமி' என்று புலம்பியழுதவன், சக்கரவர்த்தி - சாம்ராட் அசோகன்.

"ஆசையை ஒழித்துவிடு" என்ற புத்தனின் தத்துவத்தைப் போதிக்க-உலகெங்கும் பிட்சுக்களை அனுப்பி 'ராஜரிஷி' என்ற பெரும்புகழைப் பெற்றவன் அவன்.

அவனுக்கும் - வயதுபோன காலத்தில் வந்துபோனது ஒரு ஆசை.

அவன் கண்களை மறைத்த அந்த ஆசையால், அவன் கண்களைவிட மேலாகக் கருதிய வேறு இரு கண்கள் காவு கொள்ளப் பட்டுவிடுமென்று நினைக்கவில்லையே அவன்.

காட்சி 1. அசோகனின் அரண்மனை.

[மலையென நிமிர்ந்த தோளும்-மறவருள் தலையென உயர்ந்த புகழுமாக உலவிய அதே சாம்ராட் அசோகன்தான், இன்று-நரை படிந்த தலையும், திரைபடிந்த முகமும்-நாடி தளர்ந்த உடலுமாகக் கட்டிலில் அமர்ந்திருக்கிறான். அவனின் கவலை தோய்ந்த கவனம்-காற்சதங்கைச் சத்தத்தால் கலைகிறது.]

தியாகன்

அசோகன் : யாரது ?

திஷ்யரட்சதை : நான்தான் - திஷ்யரட்சதை.

அசோகன் : என்னது? (அவளைக் கூர்ந்து பார்க்கிறான்)

திஷ்யை : என்ன அரசே அப்படிப் பார்க்கிறீர்கள்? என்னைக் கூடவா உங்களுக்கு யாரென்று தெரியவில்லை ?

அசோகன் : நீ...?

திஷ்யை : சந்திரசாகரின் பேத்தி - சாருமதியின் தோழி - நான் தினமும் இங்கே வருகிறேனே.

அசோகன் : ஓகோ-கோ-கோ-அஹ்-ஹ-ஹா-ஹா அவள்தானா நீ ?

திஷ்யை : நானேதான் அவள்-உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கிறதா அரசே?

அசோகன் : இருக்காதா பிறகு? - பத்தாண்டுகளுக்குமுன் உன் பாட்டனோடு நீ வரும்போது எவ்வளவு சிறுமியாக இருந்தாய்-இப்பொழுது இவ்வளவு பெரியவளாகிவிட்டாயே.

திஷ்யை : இஹி-ஹீ-ஹி-அஹ்-ஹ-ஹா.

அசோகன் : என்ன சிரிக்கிறாய் ?

திஷ்யை : ஏன் அரசே - பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்தது போலவா நீங்கள் இப்பொழுது இருக்கிறீர்கள் - உங்கள் தலைகூட...

அசோகன் : அப்பொழுது நீ பார்த்ததைவிட - இப்பொழுது கொஞ்சம் மாறியிருக்கிறது என்கிறாய் இல்லையா ?

திஷ்யை : கொஞ்சமா மாறியிருக்கிறது - பஞ்சாக அல்லவா ஆகி இருக்கிறது.

அசோகன் : ஓகோ - (அசோகன் தலையைத் தடவியபடியே அங்கிருந்து அடுத்த அறைக்குச் செல்கிறான். திஷ்யையையும் இளவரசி இருக்கும் மாடிக்கு வருகிறாள்.)

காட்சி 2. சாருமதியின் தனியறை

திஷ்யை : மறதியின் செல்லக்குழந்தையான மாமன்னரின் குழந்தையே - இளவரசி யார் திருமதிசாருமதி அம்மையார் அவர்களே-வந்தோம்-வணக்கம்.

சாருமதி : ஏண்டி குறும்பு - உனக்காக நான் எவ்வளவு நேரம் இங்கு காத்திருக்கிறது ?

திஷ்யை : நீ காத்திருக்கிறது இருக்கட்டும். நான் வரும்போது-அரசர் என்னையே நீ யாருன்னு கேக்குறாறடி. உங்கப்பாவுக்கு எவ்வளவு ஞாபகசக்தி இருக்குதுன்னு பார்த்தயா ?

சாருமதி : அம்மா திஷ்யை - நீ பெரிய இளவரசி பாரு. உன்னை யாருன்னு மறக்காம - அப்பா ஞாபகத்தில் வச்சிருக்கணும் இல்ல.

திஷ்யை : அடியே சாரு-இங்க கொஞ்சம் பாரு. உன்னைவிட நான் அழகிங்கிறது இந்த ஊரெல்லாம் தெரிந்த உண்மை. அதை நீயே சொல்லியிருக்கிற.

சாருமதி : ஆமாடி-குட்டியா இருக்கும்போது எது எதெல்லாமோ தான் உன்னைவிட அழகா இருக்குது.

திஷ்யை : சாரு - இந்த அழகுக்கு நான் ஒரு இளவரசியாகப் பிறக்காவிட்டாலும் - இருக்கிற அழகுக்கு நான் நினைத்தால் ஒரு ராணியாகவாவது நிச்சயம் முடியும்-ஞாபகம் வச்சுக்க.

சாருமதி : அம்மா ராணி-உன்னைக் கண்டு எந்தப் பைத்தியக்கார மன்னனாவது உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தால் - பாவம், அவனுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

(இச்சமயம் இளவரசியின் மற்றொரு தோழியான சந்திரசகி உள்ளே நுழைகிறாள்)

சந்திரசகி : யாருக்கு ?

சாருமதி : சந்திரிகா-திஷ்யை ராணியாகப் போகிறாளாம்.

சந்திரசகி : எந்தத் தெருவுக்கு...

(சாருமதியும் சந்திரசகியும் வெடிச்சிரிப்பை உதிர்க்கின்றனர். திஷ்யை 'உம்' மென்று இருக்கிறாள். இச்சமயம் இளவரசனும் சாருமதியின் அண்ணனுமாகிய தர்ம விவர்த்தனன் அந்த அறைக்குள் எட்டிப் பார்க்கிறான். அவன் கண்கள்-வாயெல்லாம் பல்லாக நின்று கொண்டிருந்த சந்திரசகியின் அங்க அவயவங்களை ஆவலோடு அள்ளிப் பருகுகின்றன)

சாருமதி : வாங்கண்ணா-என்ன வேண்டும் ?

தர்மவிவர்த்தனன் : ஒன்றும் வேண்டாமே.

(தர்மவிவர்த்தனன் அங்கிருந்து நழுவுகிறான்)

திஷ்யை : இளவரசருக்கு எவ்வளவோ வயதாகிவிட்டதே. ஏண்டி இன்னும் அவர் திருமணம் செய்துகொள்ளாது இருக்கிறார் ?

சந்திரிகா : அவருக்கும் அரசருக்கும் இல்லாத அக்கரை உனக்கெதற்கடி ?

சாருமதி : அவர்களுக்கு அந்த ஆசை இல்லையென்றால் - அவளுக்கும் இருக்கக்கூடாதென்கிறாயா நீ ?

சந்திரசகி : எந்த ஆசை ?

சாருமதி : திருமண ஆசை. தனக்கு எப்போது திருமணம் ஆகப் போகிறது என்பதுதான் இவளின் இப்போதைய ஆசை. திருமணம் ஆகாத மற்றவர்களும் தன்னை மாதிரித்தானே ஆசைப்படுவார்களென்பதும் இவளின் ஆசை. என்ன திஷ்யை நான் சொல்வது சரிதானே ?

(அந்த அறையே அவர்களின் சிரிப்பால் அலறுகிறது.)

காட்சி 3.

பௌத்த விகாரம் ஒன்றின் பின்புறமுள்ள நந்தவனம்

[தர்மவிவர்த்தனன் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த சந்திரசகி-நந்தவனத்திற்குள் வேகமாக நடந்துவருவதைக் கண்ட அவன், அவளைத் தொடர்கிறான்]

தர்மவிவர்த்தனன் : சந்திரசகி...

சந்திரசகி : யார்-நீங்களா ? என்ன ? இளவரசே ?

தர்மவிவர்த்தனன் : உன்னிடம் ஒன்று சொல்லவேண்டும்.

சந்திரசகி : சொல்லுங்கள்.

தர்ம : சந்திரிகா...?

சந்திர : அரசே...!

தர்ம : எனக்கு இவ்வளவு வயதாகியும் - ஏன் நான் இன்னும் திருமணம் செய்துகொள்ள வில்லையென்று நேற்று நீ பேசிக் கொண்டிருந்ததை-நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

சந்திர : ஐயய்யோ - நான் சொல்லவில்லை அரசே-திஷ்யைதான் இளவரசியிடம் அப்படிக் கேட்டாள்.

தர்ம : அடடா-கேட்டது யாராக இருந்தால் என்ன? அவள் சொன்னது சரிதானே? என்ன -சரிதானே ?

சந்திரி : ஆமாம்-சரிதான்.

தர்ம : எனக்கே மானம் தாள முடியவில்லை. நானே திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து விட்டேன்-என்ன சரிதானே ?

சந்திரி : நல்ல முடிவுதான் - இதில் எனக்கும் மகிழ்ச்சி தான்.

தர்ம : மகிழ்ச்சிதானே - எனக்கு மனைவியாக வரப்போகிறவள் யாரென்று உனக்குத் தெரியாதே ?

சந்திர : தெரியாதே !

தர்ம : எனக்கு வரப்போகும் மனைவி எப்படியிருக்க வேண்டுமென்று நான் நினைத்திருந்தேனோ-அப்படியே இருப்பாள் அவள்.

சந்திர : அந்தப் பாக்கியசாலி யார் அரசே ?

தர்ம : கண்டிப்பாகச் சொல்ல வேண்டுமென்கிறாயா ?

சந்திர : நீங்கள் விரும்பாவிட்டால் சொல்ல வேண்டாம்.

தர்ம : நான் சொல்லாவிட்டால் அதில் சுவையிருக்காதே.

சந்திர : என்றால் சொல்லுங்கள்.

தர்ம : சந்திரிகா...

சந்திர : சொல்லுங்கள் அரசே.

தர்ம : அதுதான் சொன்னேனே-சந்திரிகாவென்று-நீதான் அவள்.

சந்திரி : .... ?

தர்ம : ஏன் அதிசயப்படுகிறாயா நீ ?

சந்திரிகா : இல்லை-வேதனைப்படுகிறேன் நான்.

தர்ம : இதை விரும்பவில்லையா நீ ?

சந்திரிகா : நடக்கவே முடியாத இதை-எப்படி நான் விரும்ப முடியும் ? யாரும் விரும்பவே முடியாத இது - எப்படி அரசே நடக்கமுடியும் ?

தர்ம : நான் இப்படித்தான் விரும்புகிறேன் - நீ எப்படித்தான் விரும்புகிறாய் ? நான் சொல்லுகிறேன்-நீ மட்டும் விரும்பினால் போதும். வேறு எவரும் இதை விரும்பாவிட்டாலும் இது நடக்காது நிற்காது. சக்ரவர்த்தி சாம்ராட் அசோகனின் ஏகபோக அன்புக்குப் பாத்திரமான இளவரசன் தர்மவிவர்த்தனின் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கும் துணிவுள்ள நெஞ்சங்களும் இருக்குமென்று கருதுகிறாய் நீ ?

சந்திர : இளவரசே - என்மீது நீங்கள் கொண்ட அன்பைவிட - இந்நாட்டு மண்மீது மக்கள்கொண்ட அன்பு அதிகமாயிற்றே! நாட்டின் பெருமை - மன்னனின் பெருமையில்தானே அடங்கியிருக்கிறது.

தர்ம : அதனால் ?

சந்திரிகா : மன்னன் மகன்-மன்னன் மகளைத் திருமணம் செய்து கொள்வதுதான் மன்னனுக்கும் பெருமை - நாட்டுக்கும் பெருமை. மக்கள் அதைத்தான் விரும்புவார்களே தவிர-இதை விரும்பவேமாட்டார்கள்.

தர்ம : நீ—?

சந்திரி : இந்த ஆசையை மறந்துவிடச் சொல்லுகிறேன். சக்கரவர்த்தி அசோகரின் குன்றாத புகழும்-குறையாத பெருமையும் கேவலம், சந்திரசகி என்னும் ஒரு சாதாரணப் பெண்ணால் ஒளி மங்கிப்போவதை ஒருக்காலும் நான் விரும்பமுடியாது அரசே-வழியை விடுங்கள். நான் வருகிறேன்.

காட்சி 4.

பௌத்த விகாரத்தின் பின்புறமுள்ள அதே நந்தவனம்

தளர்ந்த நடையும்-உடைந்த உள்ளமுமாக வந்த தர்மவிவர்த்தனன் - கன்னத்தில் கையூன்றியபடி சோர்ந்துபோய் உட்கார்ந்திருக்கிறான். அங்கே திஷ்யரட்சதை வருகிறாள்.

திஷ்யை : இளவரசே !

தர்ம : நீயா ?

திஷ்யை : எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்கு இந்தச் சிந்தனையோ ?

தர்ம : கோட்டையைப் பிடிப்பதற்குச் சிந்திக்கவில்லை நான்.

திஷ்யை : பிறகு ?

தர்ம : இடிப்பதற்குச் சிந்திக்கிறேன்.

திஷ்யை : இடிப்பதற்கா ?

தர்ம : ஆமாம்-இந்தக்கோட்டைகளும் கொத்தளங்களும் தானே என் ஆசைகளையே இடித்துத் தூள் தூளாக்கி விட்டன - என் ஆசைகளைத் தூளாக்கிய இந்தக் கோட்டைகளையெல்லாம் - ஏன் நான் இடித்துத் தூளாக்கக்கூடாது.

திஷ்யை : அப்படி என்ன உங்களுக்குத் திடிரென்று வந்து விட்டது.

தர்ம : தீராத கவலையே வந்துவிட்டது.

திஷ்யை : மனக்கவலை-மணக்கவலையைப் பற்றியதோ ?

தர்ம : திஷ்யை நான் தனியாக இருக்க விரும்புகிறேன். என்னைத் தொந்தரவு செய்யாதே.

திஷ்யை : தனிமையில் இனிமை இருக்காது அரசே - அந்தக் கொடுமையைத் தாங்கமுடியாது தானே நானும் தவியாகத் தவிக்கிறேன்;

தர்ம : திஷ்யை - இங்கிருந்து நீ போகப் போகிறாயா இல்லையா ?

திஷ்யை : வந்துவிட்டுப் போவதாக இருந்தால் - அங்கிருந்து ஏன் புறப்பட்டு வந்திருக்கப்போகிறேன்.

தர்ம : என்ன வேண்டும் உனக்கு—?

திஷ்யை : நான் வேண்டுமென்று விரும்பி வந்தது-நீங்கள் கனிவு ததும்பக் கேட்க வேண்டியது-நான் ஆசை ததும்பச் சொல்ல வேண்டியது - நீங்கள் இப்படிக் கேட்டால் - நான் எப்படிச் சொல்வது ?

(அடுத்த இதழில் முடியும்)

நம் நாடு

10-2-61-ல் 'நம் நாடு' இதழில் வந்த தலையங்கம், அப்படியே கீழே தரப்பட்டிருக்கிறது.

தமிழ்மக்கள் வாழும்தரணிக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர்தான் இருக்கவேண்டும் என்பதை, தமிழர்கள் மட்டுமல்ல - தமிழ் மொழியையோ, தமிழ்மக்களையோ அறியாதவர்கள்கூடமறுக்கத் துணியமாட்டார்கள்;மறுக்கவும் இயலாது,

தமிழ்நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயரிட மறுப்பதற்கு ஆயிரம் காரணங்கள் கூறினாலும் அவற்றை உலகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்பது உறுதி. அப்படியிருந்தும் 'சென்னை ராஜ்யம்' என்ற அவமானப் பெயரையே தாங்கிக்கொண்டு இன்னும் பன்னெடுங்காலம் வாழவேண்டும் என்று இங்குள்ள 'பச்சைத்தமிழர்' காமராசரும், சுப்பிரமணியங்களும் ஊர்ஊராகப் பறைசாற்றி வருகின்றனர்.

தாயகத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற இயற்பெயரைச் சூட்டி மகிழ்வதற்குப் பதிலாக, அப்பெயரைச் சூட்டாமல் தட்டிக்கழிப்பதற்கு என்னென்ன காரணங்களைக் கற்பித்துக் கூறலாம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு,தமிழ்மக்களின் பொறுமையைத் தொடர்ந்து சோதனைக்கு உள்ளாக்கி வருகின்றனர், தாங்களும் தமிழர்கள்தாம் என்று கூறிக்கொள்ளும் 'சென்னை ராஜ்ய அமைச்சர் பெருந்தகை'கள்! இந்த வேதனையை யாரிடம் சொல்லியழுவது !

"தமிழ்நாடு' என்ற பெயர்தான் தமிழ்மக்களுக்குச் சிறப்பும் மதிப்பும் தரத்தக்கது என்பதை வலியுறுத்த ஆயிரமாயிரம் அரசியல், வரலாற்று இலக்கியச் சான்றுகளை எடுத்து வைத்தாகிவிட்டது. ஏடுதோறும்எழுதியும், மேடைதோறும் பேசியும், இன்னோரன்ன முறைகளிலும், ஆட்சியாளர்கட்கு அறிவுறுத்தியாகிவிட்டது. இன்னமும், எழுதியதையே திரும்பத் திரும்ப எழுதவும், பேசியதையே பேசவும் சலிப்புத்தான் ஏற்படுகிறதே தவிர, பலனொன்றையும் காணவில்லை. ஆனால் ஆட்சியாளர்களோ, கிளிப்பிள்ளைபோல் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி, தங்களின் 'மேதாவிலாச'த்தைக் காட்டிக்கொள்வதில் அகமகிழ்வு பெறுகின்றனர்.

'பெயரில் என்ன இருக்கிறது?'

என்று கேட்பதில் சிறிதாவது பொருளோ அறிவுடைமையோ இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.பெயர் மாற்றமேகூடாது என்றால், இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிப்பொறுப்பைக் காங்சுரசுக் கட்சி ஏற்றுக்கொண்ட நாள்தொட்டு இன்றுவரை, எதன் பெயரும் மாற்றப்படவேயில்லை; எல்லாம் அதன் தன் பழைய பெயருடனேயே இருக்கின்றன என்று எவராவது கூறமுடியுமா? 'இந்தியா'வே 'பாரதம்' என்று மாற்றப்பட்டுவிட்டதே! எத்தனை மாநிலங்களின் பெயர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன! ஊராட்சி மன்றத்தின் பெயர் முதல் பாராளுமன்றத்தின் பெயர்வரை இந்தியில் மாற்றப்பட்டிருக்கின்றனவே! உத்தியோகத்தின் பெயரும், அலுவலகங்களின் பெயர்களும், ஆட்சி நடவடிக்கைகளின் பெயர்களும் மாற்றப்படவில்லையா? சாலைகள், தெருக்கள், மண்டபங்கள், மாளிகைகள் ஆகியவற்றின் பெயர்களையெல்லாம் திடீர் திடீர் என்று இந்தக் காங்கிரசு ஆட்சியாளர்கள் மாற்றி விடவில்லையா? இதற்கு எடுத்துக்காட்டுக்கள் கூறவேண்டுமானால் இந்த ஏடே காணுதே !

நாம் கேட்பது பெயர் மாற்றம் கூட அல்ல; இருந்த—இருக்கவேண்டிய—பொருள் செறிந்த - இயற்பெயரை, மீண்டும் வைக்கவேண்டும் என்றுதான் கேட்கிறோம். இது நமது உரிமைக் கோரிக்கையே தவிர, வெறும் பெயர் மாற்றமல்ல.

இதற்கு இலக்கியத்தில் ஆதாரம் உண்டா? வரலாற்றில் சான்றிருக்கிறதா? அரசியலுக்குப் பொருந்துமா? — என்றெல்லாம் கேட்பது அறிவுடைமையோ, மக்களாட்சிக்கு உகந்ததோ ஆகாது. ஆனால் கேட்கிறார்கள் நாடாளும் பொறுப்பிற்கு எப்படியோ வந்துவிட்ட 'நல்லவர்'கள். அவர்கள் கேள்விகட்கும் நாம் படித்துப் படித்துப் பன்னிப் பன்னிப் பலமுறை விடையளித்திருக்கிறோம். அது அவர்கள் செவியில் இன்னமும் ஏறவில்லை! என்ன செய்வது?

'தமிழ்நாடு' என்பது பண்டைய இலக்கியத்தில் இல்லை என்று கூறுகிறார், முதலமைச்சர் காமராசர்-இலக்கியத்தைத் துருவித் துருவி ஆராய்ந்தறிந்தவர் போல். இதை இவர்தான் முதன் முதலாகக் கூறுகிறாரா என்றால், இல்லை. இதற்குமுன் நிதியமைச்சர் சுப்பிரமணியமும் கூறியிருக்கிறார்; அதற்குப் பதிலும் பலமுறை சொல்லியிருக்கிறோம்.

இனி அவர்கள் புதிதாக எதையும் கண்டுபிடித்துச் சொல்லி, அதற்குப் பதிலளிக்க முடியாமல் திணறும் நிலைமை நமக்கு ஏற்படும் என்று எவரும் எண்ண வேண்டியதில்லை. இருந்தாலும் ஏன் அவர்கள் இப்படியே திரும்பத் திரும்பப் பேசி வருகிறார்கள் என்றால், இதைத் தவிர அவர்களால் வேறு எதையும் பேச இயலாது.

காமராசர் கூறுவதுபோல இலக்கியத்திலேயே 'தமிழ்நாடு' என்ற பெயர் இல்லை என்று வாதத்திற்காக வேண்டுமானாலும் ஒப்புக்கொள்வோம். இல்லாவிட்டால் என்ன? இலக்கியத்தில் இருந்தால்தான் எதையும் இந்த ஆட்சி செய்யுமா? தாயகத்துக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயரிடக் கோருவது மக்களின் உரிமைக் கோரிக்கையல்லவா? இந்தக் கோரிக்கை மக்களிடமிருந்து ஒருமித்து எழுப்பப்படும் போது அதை நிறைவேற்ற மறுப்பது, எந்த ஜனநாயக முறைக்கு ஒத்தசெயலாகும் எனக் கேட்க விரும்புகிறோம்.

நமது தமிழ்நாட்டு முதலமைச்சர் காமராசர்; தமிழர்களிடையே இப்படிப் பேசி வருகிறார். இதே நேரத்தில், தமிழ்நாட்டையே சேராத, தமிழ்மொழியையோ, தமிழர்களின் தனிச்சிறப்பையோ அறிந்திருக்கமுடியாத காஷ்மீர் அமைச்சர் ஒருவர்,நமது கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துக் குரல் கொடுத்திருக்கிறார்.

காஷ்மீர் அரசின் வணிக, தொழில்துறை அமைச்சரான திரு. சியாம்லால் சராப் என்பார், திருவனந்தபுரம் செல்லும் வழியில் சென்னை வந்திருந்தபோது, 'தமிழ்நாடு' பெயர் கோரி நடக்கும் அறப்போரை ஆதரித்துப் பின்வருமாறு உரைத்திருக்கிறார்:—

"சென்னை மாநிலத்தின் பெயரை மாற்றவேண்டும் என்று கோருவதில் எவ்விதத் தவறுமில்லை. எந்த வகையில் பார்த்தாலும் சென்னை தமிழ் மாநிலம்தான். தமிழ்நாடு என்ற பெயர்தான் செவிச்சுவையும், சிறப்புமிக்கதுமாகும்."

இப்படிக் கூறியவரும் ஓர் அமைச்சர்தான்;காமராசரும் ஓர் அமைச்சர்தான் !

தமிழ் நாடு

[8-2-61 தமிழ் நாடு நாளிதழில் வந்த தலையங்கம் இது]

சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற தொல் பெயரைச் சூட்ட வேண்டுமென நடந்துவரும் கிளர்ச்சி குறித்து, மதுரையில் முதலமைச்சர் திரு காமராசர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் வாதத்திற்குரியனவாகும்.

தமிழ்நாடு பெயர் மாற்றத்தைப் பற்றி நன்கு ஆலோசித்த பின்னரே முடிவு செய்யவேண்டும் என்று அவர் கூறியிருப்பதில் தவறேதுமில்லை. ஏனெனில், எச்செயலையும் எண்ணித் துணிந்து மேற்கொள்ளுதலே சிறப்புடையதாகும். ஆயினும், தாயகத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயர் இட வேண்டுமென்ற விழைவு இன்று ஏற்பட்டதன்று. கட்சி வேறுபாடின்றி காங்கிரசின் ஆதிக்கத்தில் உள்ள நகராண்மைக் கழகங்கள், ஊராட்சி மன்றங்கள் உட்பட, எல்லோரும் தமிழ்நாடு பெயர் மாற்றத்தைப் பல ஆண்டுகளாக வற்புறுத்தி வருகின்றனர். உண்மை இவ்வாறு இருக்கையில் இதைப்பற்றி அமைதியாக ஆராய வேண்டுமெனக் கூறுதல் பொருத்தமாகத் தோன்றவில்லை.

இனி, தமிழ்நாடு என்று பெயர் மாற்றி விடுவதால் பஞ்சம், பட்டினி எல்லாம் அகன்று விடுமா என முதலமைச்சர் வினவியிருக்கிறார். உலகியலோடு அரசியல் அனுபவம் சான்ற முதலமைச்சரைப் போன்றோர் இத்தகைய கேள்வியை எழுப்பியுள்ளமை மிகவும் வருந்தத் தக்கது. ஏனெனில் மக்கள் வறுமையை நீக்குவதில்தான் ஆட்சியாளர் தமது முழு ஆற்றலையும் செலுத்தி வருகின்றனர் என்றால், ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, மக்கள் விருப்பத்திற்கு எதிராக இந்தி ஏன் திணிக்கப் படுகிறது என்ற வினா எழுகிறது. அம்மட்டோ! எல்லோருக்கும் புரிந்த பாராளுமன்றம், சட்டசபை, வைசுராய் மாளிகை, ஆளுநர் இல்லம் ஆகியன "லோக்சபை" 'விதான் சபை" 'ராஷ்டிரபதிபவன்" "ராஜ்பவன்" எனப் பெயர் மாற்றப் பட்டனவே? மேலும், உலகனைத்தும் அறிந்த ஐக்கிய மாகாணமும், மத்திய மாநிலமும் "உத்தர் பிரதேஷ்" "மத்ய பிரதேஷ்" என்று உருமாறி விட்டனவே! இவற்றால் பற்றுக்குறையும், பட்டினித் துயரும் பறந்துவிட்டனவா?

அடுத்து, "மதராசு" என்றால் உலக முற்றிலும் தெரியுமென்றும், அது தமிழ்நாடு என வழங்கினால், வெளிநாட்டினர் அதை ஏதோ ஒரு புதியநாடு என்று கருதி இங்கு முதலீடு செய்யத் தயங்குவர், எனவும் முதலமைச்சர் அறிவுறுத்தியிருத்தல் வியப்பூட்டுவதாகவுள்ளது. ஏனென்றால், இது அணு விஞ்ஞான யுகம், உலகின் எப்பகுதியில் யாது நிகழினும், அது ஒரு நொடிக்குள் எல்லா நாடுகளிலும்பரவிவிடுகிறது. வானொலி, தொலைக்காட்சி முதலியன உலகை ஒரே குடும்பமாகச் சுருக்கியுள்ளன. இந்நிலையில், சென்னை மாநிலம் தமிழ்நாடு என்று பெயர் சூடின், அதை உலகம் அறியாது என வாதிப்பது ஏற்புடையதாகாது சான்றாக, பண்டை பெருநாகரிகம் சிறந்த எகிப்து 'ஐக்கிய அரபுக் குடியரசு" என்று தனது பெயரை மாற்றிக் கொண்டதால், அதை உலகம் புரிந்து கொள்ளவில்லை என யாரேனும் கூறமுடியுமா? அத்துணை தூரம் செல்வானேன்? பம்பாய், "மகாராட்டிரம்" "குசராத்" என்றும், திருவாங்கூர்-கொச்சி "கேரளம்" எனவும், ஐதராபாத் 'ஆந்திரம்" ஆகவும் மாறியதன் விளைவாக அவற்றின் முதலீடு சுருங்கிவிட்டதா? இல்லையே!"

உண்மை இவ்வாறு இருக்கையில், பொருந்தாக் காரணங்கள் காட்டித் தமிழ்ப் பெருமக்களின் ஒருமித்த வேண்டுகையை ஆட்சியாளர் தொடர்ந்து புறக்கணித்து வருதல் பொருந்தாது. ஆதலின், பிடிவாதம் விடுத்து முக்கோடி தமிழர்களின் நெடுநாளைய விழைவை நிறைவேற்ற நமது மாநில அரசு முற்படுதலே அறமும், கடமையுமாகும்.

வெண்பாப் போட்டி

பச்சைத் தமிழரின் பண்பு.

தென்னுட்டின் தூணெனச் செப்புமுதல் மந்திரிக்குச்
சென்னையின்பேர் மாற்றுந் திறனில்லை - தென்றலே!
துச்சமெனத் துப்பும் வடக்கைத் துதிப்பதா
பச்சைத் தமிழரின் பண்பு?

—பா. ஐ. முகப்மதுஅலி, செங்கற்பட்டு.

பள்ளி யறைக்குள்ளே பாவையிடம் பாவேந்தன்
துள்ளிக் கிளம்பிவரும் துட்டருக்குக் கொல்களிறு
துச்சம் உயிராக மானம் தொடர்பாதல்
பச்சைத் தமிழரின் பண்பு.

—தவமூர்த்தி, பெங்களூர்.

'நிச்சயம் வேண்டும் நெறியார் தமிழ்நாடே
இச்சைப் படுகின்ருர் இன்தமிழர்' - என்றேதான்
துச்சம் வடவாநீ தூதூ பெயரிடென்றல்
பச்சைத் தமிழரின் பண்பு

—அவா. இன்பதாசன், சென்னை-1

நாடாள வள்ளுவன் நாவசைத்த சீர்கருத்(து)
ஊடாடா நெஞ்சத்தின் உள்ளிலே - கேடாள,
அச்சத்தால் நேரு அடிதொழுமோ? "நாடாளும்"
பச்சைத் தமிழரின் பண்பு!

—பத்மா, சென்னை-12

போர்செய்து மார்பில் புதுவிழுப் புண்ணேற்றல்
தேரிழந்து நண்ணுர் திறனிழந்தால் - கூர்அம்பைத்
துச்சம் எனவே சுடர்வாள் பொருதலுமே
பச்சைத் தமிழரின் பண்பு.

—''மதிஒளி'' சென்னை-5

வில்வக்காய் மார்பம் வியன்மார்பில் முத்தமிட
மெல்லச் சிரித்தாயே முல்லையே - எல்லாரும்
நச்செண்ணம் விட்டு நமக்கு மணம்செய்வதன்ருே
பச்சைத் தமிழரின் பண்பு.

—எஸ். கே. வெங்கடேசன், சென்னை-7

எச்சில் இலைபொறுக்கி எங்கோ படுத்துறங்கி
பிச்சை எடுத்தே பிழைக்கின்ருர் - இச்செகத்தே
நஞ்சு வடநாட்டை நம்பிக் கிடத்தலோ
பச்சை தமிழரின் பண்பு.

—செ. செல்லையா, சமுத்திரம்.

மாற்ருரைத் தூற்றுவதும் மாநிலத்தின் பேர்சூட்டல்
சோற்றையா நல்குமெனச் செப்புவதும் - மாற்றுரைத்தால்
துச்சமாய் கொள்வதுவும் தோகையே! இந்நாளில்
பச்சைத் தமிழரின் பண்பு.

—மு. வரதராசன், துறையூர்.

புலிநகத்தைத் தாலியாப் பூண்டதுவும் சீறும்
புலியை முறத்தால் புறங்காட்ட ஒட்டியதும்
அச்சமின்றிப் பெண்களும்போ ராடியதும் முன்பிருந்த
பச்சைத் தமிழரின் பண்பு

—முதுவை சா. செங்குட்டுவன், விருத்தாசலம்.

நச்சரித்தார்! நங்கையின் நாடி நகைதந்தார்
இச்செகத்தில் ஏற்பேன் இனிதென்ருர்! - 'இச்'செனும்
அச்சுகம் கண்டபின்னர், அன்பின்றிக் கைவிடலோ
பச்சைத் தமிழரின் பண்பு?

—"செஞ்சடையான்", திருக்கழுக்குன்றம்.

மான உணர்வின்மை; மக்கணலம் எண்ணுமல்
ஈனச்சொல் வீசி இனஉணர்வை ஏசுதல்
நச்சாம் வடவர்தாள் நத்தல், விருதுநகர்ப்
பச்சைத் தமிழரின் பண்பு.

—வில்லவன்கோதை, காஞ்சி.

விற்பனையாகிறது!

கண்ணதாசனின்
கட்டுரைகள், கதைகள், நாடகங்கள்.



பைந்தமிழ்ப் பதிப்பகத்தின்
முதல் வெளியீடு.

★ சித்தத்தில் ஒளிவீசும்
தத்துவக் கட்டுரைகள்.

★ வித்தகர்கள் பாராட்டும்
இலக்கியக் கட்டுரைகள்.

★ தித்திக்கும் தீஞ்சுவைசேர்
தேன்பாங்குச் சிறுகதைகள்.

★ சித்திரத்துத் தமிழ்வடிக்கும்
சிறப்புமிகு நாடகங்கள்.

இதுவரை நூல்வடிவமாக வெளிவராத எழுத்தோவியங்கள்
அனைத்தும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

படிப்பகங்கள், நூலகங்கள், பைந்தமிழர்
இல்லங்கள், கருத்தறியும் துடிப்
புடையோர் கையில் எல்லாம்
இருக்க வேண்டிய கருத்
துக் கருவூலம்.

விலை ரூபாய் 2-50

பதிவுத் தபாலில் பெற விரும்புவோர் 75 காசுகள் சேர்த்து
அனுப்ப வேண்டும்.

விற்பனையாளர்களுக்கு 25 சதவீதம் கழிவு உண்டு.

விற்பனை உரிமை:

தென்றல்
2/127. மவுண்ட்ரோடு,
சென்னை-6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு,
தொலைபேசி எண் 88510.